RECEIVED 22 FEB 1973 TANJORE MAHAL LIBRARY

என் எண்ணம், எழுத்து, செயல், இயக்கம்!

என்மொழி, என்னினம்,
என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென
எண்ண மாட்டேன்—வேறு
எவரையும் புகழ்ந்துரை
சொல்ல மாட்டேன்!—வரும்
புன்மொழி, பழியுரை,
துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம்
கொள்ள மாட்டேன்!—இந்தப்
பூட்கையில் ஓரடி
தள்ள மாட்டேன்!

(தொடர்ச்சி 1-ஆம் பக்கம்)

தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி: 10
இதழ்: 9

எரு 75 காசு

நமக்கு வந்த மடல்கள்.

0: 354: பைந்தமிழ்ப் பாவல! நான் 'தென்மொழி'யின் தோற்றந்தொட்டு அதைச் சுவைத்திலனாயினும் கடந்த ஓராண்டுக் காலமாய் அதன் தெள்ளமுதச் சுவையை அள்ளிப் பருகி வருகின்றேன். இத்தகு இதழமுதை இத்தனை நாளும் சுவையாது போனேமே, பைந்தமிழின் தெளிதேனைப் பருகாது வாழ்வைப் பாழடித்துக் கொண்டோமே என்னும் ஏக்கம் மேலிட்டவனாய்ப் பழைய 'தென் மொழி' ஏடுகள் கிடைக்காவா எனத் தேடிக் களைத்தவன். தங்களின் ஒப்பற்ற தமிழ்ப் பற்றுக்கும், உயரிய புலமைப் பெருக்குக்கும் என் உள்ளத்தைப் பறி கொடுத்தவனாய் என்னை உங்கள் மாணவனாக ஏற்றுத் தமிழ் கற்றுத் தாருங்கள் என மடங்கல் வழி மண்டியிட்டவன். நல்ல தமிழில் வெளிவரும் ஒரே திங்களிதழ் 'தென்மொழி'! கற்பவரின் உணர்ச்சியையும் உள்ளத்தையும் தட்டி எழுப்ப வல்ல பைந்தமிழ்ப் பாவலர் பாவேந்தருக்குப் பின் பெருஞ்சித்திரனாரே என்ற எண்ணத்தால் தங்களிடம் அளவற்ற மதிப்பு வைத்திருப்பவன். இந்நிலையிலேதான் 'அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக்காக்க' முகப்புப்பாடலையும், அதைத் தொடர்ந்து 'கலைஞரின் கைகளை வலுப்படுத்துக' ஆசிரிய உரையையும் கண்டேன். பாழும் அரசியல் பாவலரின் உள்ளத்தையும் உலுப்பி விட்டதே என்று குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில் ஓலை 7-8 கிடைக்கப் பெற்றேன். 'இன நலம்பெரிது' முகப்புப் பாடலிலும் கலைஞரின் சுவடுகள் பதித்திருந்த தன்மை கண்டு கண்கலங்கினேன். எங்கே தங்கள்மேல் உள்ள பற்றுதல் பிடிப்பு அனைத்தையும்' அரசியல் சேற்றில் ஆழப்புதைக்க நேர்ந்துவிடுமோ என்ற ஐயம் என்னுள் எழுகின்றது. அதே நேரத்தில் ஏன் இந்த இழிவான எண்ணம் என்று என்னை நானே தேற்றிக் கொள்கிறேன்.

தமிழைக் குழிதோண்டிப் புதைப்பதையே தங்களின் தலையாய கடனாகக் கொண்டு பல 'பார்ப்பனீய' ஏடுகள் முனைந்து செயல்பட்டு வரும் இந்த நேரத்தில், தாங்களும் 'அரசியல் சுழ'லில் சிக்கி அல்ல லுற நேர்ந்து விட்டால் பின் தமிழின் நிலை என்ன? தமிழ்காக்கும் பணியில் தங்களின் தலைமை ஒன்றையே நாடும் என்னைப் போன்ற தென்மொழி அன்பர்களை ஆற்றுப்படுத்தும் அஞ்சா நெஞ்சன் யார் என்பதை எண்ணி முன்போல் 'தென்மொழி'யில் தங்களின், முத்திரைகளைப் பதிக்க வாருங்கள் என வேண்டுகிறேன். நம்மை நம்பிக் கலைஞரும் இல்லை. அவரின் தமிழ்க் காவலை நம்பி நாடும் நிற்கவில்லை. எனவே அவர் வழியில் அவர் செல்லட்டும். நம்வழியை நாம் தொடர்வோம். கலைஞரைக் காக்கும் முனைப்பை ஒத்திப்போட்டு விட்டு 'கனித்தமிழ்'க் காப்பை நோக்கி நடையிடுங்கள். பார்ப்பன வல்லூறுகளால் தமிழ்த் தாய்க் கிடப்பட்ட 'காப்பை' உடைத்தெறியத் தோள் தட்டுங்கள். தங்களின் அறிவும், ஆற்றலும், அஞ்சாத் தனிச் சிறப்பும் அருட்செல்வரைக் காத்ததுபோதும். அவற்றை நம்வழியில் செலவிடுங்கள். இனிவரும் 'தென்மொழி' ஏடுகளிலேனும் தங்களின் புரட்சித் தமிழ் கொஞ்சி மகிழட்டும். புலமை பூத்துக் குலுங்கட்டும்!

—பொ. பூங்குன்றன்-அரவக்குறிச்சி.

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

கண்ணிலும் கருத்திலும் காதிலும் உயிர்க்கின்ற
காற்றிலும் மிளிர்வது தமிழேதான்!—என்
கவலைக்கும் கரணியம் அதுவேதான்! —உளம்
எண்ணியும் எழுதியும் எடுத்தெடுத் தியம்பியும்
இன்புறச் செய்வதும் தமிழேதான்—அதற்
கிணையென நிற்பதும் அதுவேதான்!

உடுக்கையில் உண்கையில் ஓரடி நடக்கையில்
உறக்கத்தும் வேறெதும் எண்ணி யறியேன்—மனை
உறவிலும் காதலைப் பண்ணி யறியேன்—உயிர்
விடுக்கினும் தமிழெனும் நினைவொடு விடுத்திட
வேண்டுமென் றிறைவனைக் கேட்டுத் தொழுவேன்—ஒரு
வேற்றுமையும் இல்லையதில் உள்ளம் வழுவேன்!

என்மொழி தாய்மொழி, இன்மொழி அதைவிடுத்
தெவர்மொழி ஆயினும் கற்க மாட்டேன்!—வேறு
எவரையும் கைதொழ நிற்க மாட்டேன்—ஒரு
புன்மொழி புலைமொழி புதுமொழி எதுவுமிப்
புலத்தினில் கால்வைக்க ஒப்ப மாட்டேன்! —கோடிப்
பொன்னுக்கும் தமிழ்மனம் விற்க மாட்டேன்!

(ஓரசை மாற்று)

மனைவிக்கும் மக்களுக்கும் மாளிகையில் வாழ்வதற்கும்
மற்றெதற்கும் பல்லிளிப்புக் காட்ட மாட்டேன்—தன்
மானமின்றிக் கையதற்கு நீட்ட மாட்டேன்—தமிழ்
நினைவுக்கும் செயலுக்கும் நீண்டநெடுந் தொண்டினுக்கும்
நீட்டியதோர் காசெனினும் கூச மாட்டேன்—என்னை
நிற்கவைத்துப் 'போ'எனினும் ஏச மாட்டேன்!

என்மொழியை என்னினத்தை என்நிலத்தை மாற்றானிடம்
இட்டுவிட்டுச் சோம்பிவிட உள்ளம் இசையேன்—அவன்
எடுத்தெறியும் காசுக்கிரு கைகள் பிசையேன்—என்
தென்மொழியை, கண்ணொளியை, மூச்சுயிர்ப்பைச்
[சாகும்வரை
தேர்ந்தஉயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன்—வாழ்வு
தீர்ந்துவிடின் வேற்றுடலம் மாற்றி வருவேன்!

தென்மொழி

இலக்கிய இதழ்

> "கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
> அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
> துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
> எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 10: ஓலை: 9
[நிறுவனம் தி. பி: 1990 (1959)]
சுறவம் தி. பி. ௨௦௦௪ - (சன-பெப் 1973)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.

ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்!-2

தனிப்பட்ட ஒருவர் செய்யுந் தீங்கை விடக் கொடியது, குறிப்பிட்ட ஓரினம் பொதுவான ஒருவகை மொழி, இன வெறுப்புடன், பல நூற்றாண்டுகள் இத் தமிழகத்தில் இயங்கி வருவது. பார்ப்பனப் பதடிகள் தமிழையும் தமிழகத்தையும், பாழ் செய்வதை மனமார உணர்ந்த ஒருவன் அவர்களைத் தமிழர்கள் என்று ஒருபோதும் ஒப்புக் கொள்ளவே மாட்டான். பார்ப்பனர்கள் தமிழர்கள் என்றால் அவர்கள் திரவிட இனத்தவராகவே வேண்டும். அப்படி அவர்கள் திரவிடர்கள்தாம் என்றால் ஆரியர் என்பவர் யார் என்று வரையறுக்க

வேண்டும். ஆரியரே இந்நாட்டுக்கு வரவில்லை என்றால் பார்ப்பனர் நிறத்தாலும், மொழியாலும், பழக்க வழக்கத்தாலும். குலத்தாலும் வேறுபடுவது ஏன் என்று விளக்க வேண்டும்! இவையெல்லா வற்றையும் விடுத்து, மாந்தர் குலம் எல்லாமும் ஒன்றுதான் என்றால், மத, இன,குல வேறுபாடுகளும், மாந்தரின் உயர்வு தாழ்வு முறைகளும் அடியோடு தொலைக்கப் படவேண்டும். பார்ப்பனர் தமிழர் என்பதால் பார்ப்பனர்க்கு ஊதியமென்றால், தமிழர்களுக்கு இழப்பன்றோ ஏற்படு கின்றது. மொழியாலும், இனத்தாலும், நாட்டாலும் ஏற்படும் அவ் விழப்பை எப்படித் தாங்கிக் கொள்வது? மேலும் பார்ப்பான் தமிழ னென்றால் அவன் வீட்டுப் பெண்ணை நம் வீட்டுப் பையன் கட்ட அவனிசைய வேண்டும். நம் வீட்டுப் பெண்ணை அவன் வீட்டுப் பையன் கட்டிக்கொள்ள அவன் மறுப்புச் சொல்லுதல் கூடாது.அவன் தன்னை உயர்வு என்பதையும், தன் தாய்மொழி சமசுக்கிருதம் என்பதையும், அவற்றிலுள்ள ஈடுபாட்டையும் அறவே விட்டு விடுதல் வேண்டும். வாழ்க்கைப் பொது நிலையில் அவன் எல்லாரையும் போலவே வாழ்தல் வேண்டும். இப்படி ஒரு நிலை ஏற்படும் வரை அவனுந் தமிழன்தான் என்னும் பேச்சை அடியோடு விட்டொழிக்க வேண்டும்.

வானொலித்துறை அவர்கள் கைகளில் கிடைத்து விட்டது என் பதற்காக அவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களுக்கும் அடிக்கும் கொட்டங்களுக்கும் அளவே யில்லை. நாட்டிலுள்ள 36 பெரிய வனொலி நிலையங்களிலும், 12 சிறிய துணை நிலையங்களிலும் பெரும்பா லானவை அவர்கள் கையுள் ஒருங்கிக் கிடக்கின்றன. ஒவ்வொரு நாள் காலையிலும் அருள்வாக்கு என்னும் பெயரால் அவர்களின் வேத, புராணப் பொய்யுரை புளுகுரைகளே பெரிதும் பரப்பப் படுகின்றன. இவை திணிக்கப் பெறுகின்றன என்றே சொல்லலாம். பிறசமயச் சமன்பாடு என்னும் போர்வையில் ஓரிருகால் இசுலாமிய, கிறித்துவ மதக்கருத்துகள் சொல்லப் பெறுகின்றன எனினும் அவற்றை யெல்லாம் எடுத்து விழுங்கும் அளவுக்கு இவர்களின் வேத, புராணக் கருத்துகள் வலிந்து ஒலிபரப்பப் பெறுகின்றன. அதுவுமன்றி இடையிடையே ஒலிபரப்பும் நிகழ்ச்சிகளும் கருத்தளவிலோ மொழி யளவிலோ தமிழ இனத்திற்கு எதிர்ப்பாகவே இருக்கின்றன- அதில் வரும் கதைகள், பாட்டுகள், நாடகங்கள் அவற்றில் வரும் உரை யாடல்கள் அனைத்தும் பார்ப்பனர் வீட்டுப் பழக்க வழக்கங்களை அடியொட்டியும், அவர் வழங்கும் சிதைவுச் சொற்களையும், இழுப்புச் சொற்களையும் கொண்டுமே விளங்குகின்றன.வானொலிப் பாடல்களைக் கேட்கவே முடியவில்லை. திரைப்படங்களில் வரும் இழிந்த, அரு வருப்பான, இருபொருள் கொண்ட, இழுப்புப் பறிப்பான கெக்கலிசை

முக்கல் முணகலோசை கொண்ட பாடல்களாகவே பொறுக்கி யெடுத்து ஒலிபரப்பப் படுகின்றன. அதுவும் இரவு நேரங்களில் படுக்கையறைத் தொடர்பாகப் பச்சையான பொருள் தரக்கூடிய பாடல்களையே அங்குள்ள பார்ப்பனர்கள் தேர்ந்து ஒலி பரப்பு கின்றனர். தமிழில் இசையும் இல்லை; நல்ல கருத்துள்ள பாடல் களுமில்லை என்று மக்கள் தாமே உணர்ந்து கொள்ள வேண்டு மென்பதற்காகவே அப்படிச் செய்கின்றனர். தமிழ்மொழியை இசை, உரை, நாடகம் அனைத்துத் துறையிலும் இழிவுபடுத்த வேண்டு மென்பது இவர்கள் கருத்து. கருநாடக இசை என்பதாகக் கூறித் தெலுங்குத் தியாகராயர் பாடல்களே திரும்பத் திரும்ப ஒலிபரப்பப் படுகின்றன. இவை இரண்டையும் மாறி மாறி ஒலிபரப்புவதில் அவர்களுக்கு ஓர் உள்நோக்கம் இருப்பதாகவும் கூறலாம். தமிழ் மொழிப் பாடல்களைப் பகடி செய்வது போலும், தமிழ்ப் பாடல்கள் என்றால் இப்படித்தான் கீழ்த்தரமாக இருக்கும் என்று காட்டுவது போலும், மிகவும் இழிவான பொருள் தரும் இழுப்பிசைப் பாடல்களையே பொறுக்கி ஒலிபரப்புவது, அவர்களின் சமயக் கருத்துகள் நிறைந்த தெலுங்கிசைப் பாடல்களில் ஓர் உயர்ச்சியைக் காட்டுவதற் காகவே ஆகும். இல்லெனில், இக்காலத் திரைப்படப் பாடல்களிலேயே ஓரளவு உயர்ந்த பொருள்கொண்ட பாடல்களும் இருக்க, அவற்றை விட்டு விட்டு, இழிந்த இசையும் பொருளும் கொண்ட பாடல்களையே பொறுக்கிப் போடுவார்களா? நம்மவற்றின் இழிவையும் அவர்களின் சிறப்பையுமே விளம்பரப் படுத்துவது அவர்களின் பல்வேறு தந்திர முறைகளுள் ஒன்றாகும். அவர்களுக்கு எது பிடித்ததோ, சார்பானதோ அதைப்பனிமலை என்பார்கள்; அவர்களுக்கு எதைப் பிடிக்காதோ, எது சார்பு இல்லாததோ, அதைக் குப்பைமேடு என்பார்கள். அவர்கள் கதைகளும் அவ்வாறான நோக்கில் வரைந்தவைதாம். இராமனை மாந்தருள் மிகவுயர்ந்தவனாகக் கற்பிப்பார்கள். இராவணனை (அவன் ஆரியர்களுக்கு மாறானவன் என்பதால்) மிகவும் தாழ்ந்தவனாகக் கற்பித்து உரைப்பார்கள். வானொலிப் பாடல்கள் தேர்விலும் அதில் வரும் கதை, நாடகங்கள் பாட்டுகள் இவற்றைக் கொண்டும் இவர்களுக்குத் தமிழ் மொழியின்மேல் உள்ள வெறுப்பையும், சமகுக் கிருத்ததிலும், இவர்களின் வேத, புராண, இதிகாசங்களில் கொண்ட வெறியையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தி. மு. க.வில் ஏற்பட்ட பிளவு இவர்கள் நெடுநாட்களாக எதிர் பார்த்த ஒன்று. எப்பொழுது இராசாசி வாழ்த்தை மட்டும் பெற்றுக்

கொண்டு அவர் காட்டிய வழியைத் தி. மு. க.வினர் புறக்கணித்தனரோ, அன்றிலிருந்தே தி. மு. க. அழிந்து போக வேண்டும் என்பது இவர்கள் குறிக்கோள். கடந்த இடைத் தேர்தலில் தி. மு. க. வெற்றி பெறக்கூடாது என்பதற்காக இவர்கள் இல்லாத கடவுளர்களை யெல்லாம் வேண்டாத வேண்டுதல்கள் செய்ததைத் தன்மானத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருக்கலாம். வானொலியிலும் இதே வகை வெறுப்பை அன்றாடம் இவர்கள் உமிழ்ந்து வருவதை அறிகையில் நாம் அவர்களின் அழிம்புகளை மறந்து, அவர்கள்மேல் அன்பு காட்ட முடியாது. திரு.எம்.சி.இராமச்சந்திரன் இவர்களுக்கு வேண்டியவராக என்றும் இருந்ததில்லை. திரைப்படங்களில் அவரின் ஆடல் பாடல்களும் உரையாடல்களும் தி.மு.க.வைச் சார்ந்திருந்தமையால் அவரை இந்தப் பார்ப்பனர்கள் என்றுமே வெறுத்து வந்துள்ளனர். ஆனால், அண்மையில் திரு. எம். சி. இராமச்சந்திரன் ஆளுங்கட்சியாகிய தி. மு. க.வை வேறு சில அரசியல் கரணியங்களுக்காகக் கண்டித்து வெளியேறி, வேறொரு கட்சியை அவர்களுக்கு எதிராகத் தொடங்கிக் கொண்டார் என்பதற்காகவே, அந்தப் பிரிவு ஏற்பட்ட நேரத்திலும் சரி, அதற்குப் பின்னும் சரி, திரைப்படங்களில் அவர் பாடுவன போல் உள்ள பாடல்களாகவே பார்த்துப் பொறுக்கி அவற்றையே ஒலி பரப்பி வந்ததையும், வருவதையும் உணர்கின்றவர்கள், இவர்களின் மனக் காழ்ப்பையும் நடுநிலை திறம்பிய குறும்புத் தனங்களையும் நன்றாக அறியலாம்.

சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி ஆகிய மூன்று வானொலி நிலையங்களிலும், தில்லியில் உள்ள 'விவிதபாரதி'யிலும் பெரும் பாலும் ஆரியப் பார்ப்பனர்களே கொட்டமடித்து வருகின்றனர். அவற்றில் உள்ள பார்ப்பனத்திகள் பேசுகின்ற திண்ணைப்பேச்சுகளைத் தன்மானமுள்ள எந்தத் தமிழனாலும் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்க முடியது. மொழிப்பற்றும், இனப்பற்றும் அற்ற தமிழின முண்டங்களில் சிலரின் தலையாட்டுதல்களே தமிழர்களின் ஒருமித்த கருத்துகளாகிவிட முடியாது.

பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் காலை நேரத்தில் 'கிள்ளைகளே கேளுங்கள்' என்னும் பகுதியில் அங்குள்ள பாா்ப்பனத்தி ஒருத்தி ஒரு நாள் கீழ்வருமாறு பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு அறிவு(!)றுத்தினாள்.

"என்ன, குழந்தைகளே! காலையிலே ஸ்நானம் பண்ணி டிரஸ் செய்துகொண்டு ஸ்கூலுக்குப் புறப்பட்டுட்டீங்களா? உங்க புக்ஸ், நோட்புக்ஸ், பென்சில், பேனுக்களை யெல்லாம் டயம் டேபிள் பிரகாரம் கரெக்டா எடுத்து வச்சுகிட்டீங்களா? டிபன் சாப்பிடற துக்குள்ளே நான் சொல்றதையுங் கேளுங்க" என்று தொடங்கி 'அவாள்' பார்ப்பனச்சேரி மொழியிலே இரண்டு மூன்று நிமையங் களிலே நஞ்சையே கொட்டினுள். இப் பார்ப்பனப் பெண் ஏதோ ஆங்கிலேயக் குழந்தைகளுக்குச் சொல்வது போல் தோன்றியதே தவிர, தமிழ் நாட்டில் உள்ள தமிழ்க் குழந்தைகளுக்குச் சொன்ன தாகத் தெரியவில்லை. குளித்தலை ஸ்நானம் என்றதையும், உடை யுடுத்தலை டிரஸ் செய்தல் என்றதையும், பொத்தகங்களையும், சுவடிகளையும் புக்ஸ், நோட்புக்ஸ் என்றதையும் பிற சொற்களையும் கேட்கும் பொழுது இவள் தமிழைக் கெடுப்பதற்காக வேண்டு மென்றே சொன்னதாகத் தெரிகின்றதே தவிர, அங்குள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் அவளுக்குத் தெரியாமல் அப்படிச் சொல்லி விட்டாள் என்று நினைக்கத் தோன்றவில்லை. இன்னொரு முறை அதே வானொலியில் அந்தப் பார்ப்பனத்தியே "மார்கழி மாதம் அதிகாலையில் எழுந்து குளித்துப் பாவைப் பாடல் களைப் பாராயணம் பண்ணினு, புயல் அடிக்காது; கடல் பொங்காது; பசுக்களெல்லாம் குடங் குடமாகப் பால் பொழியும்; பயிர்களெல்லாம் வானத்தளவு வளர்ந்து பயன் தரும்" என்று கூறுவதைக் கேட்க நேர்ந்தது, அதற்குச் சில நாட்கள் முன்னர்தான் தமிழகம் கடுமையான புயலாலும், மழையாலும் மிகவும் துன்புற்றது. அந்தநேரத்தை எவ்வாறு தம் பழங் கருத்துகளுக்குப் பக்கத் துணையாகப் பயன்படுத்திக் கொள் கின்றனர், பார்ப்பனர் என்பதைப் பாருங்கள். இராமாயண, பாரத காலத்தில் உள்ள மக்களாக நம்மைக் கருதிக்கொண்டு, அவள் புளுகினதைக் கேட்கையில் ஒருபுறம் எரிச்சலும்,ஒருபுறம் வருத்தமுமே வந்தன. இவ்வளவு உயர்ந்த கருவி இவர்களின் கைகளில் கிடைத்துக் கொண்டு, எவையெவற்றிற்கோ பயன்பட்டுச் சீரழி கின்றதே என்பதில் எரிச்சலும், நிலவு மண்டிலச் செலவுக் காலத்திலும் நம்மவர்களை இந்த ஆரியப்பார்ப்பனர்கள் இப்படி ஏமாற்று வார்களானுல் நம் முன்னோர்களை எப்படி ஏமாற்றியிருப்பார்கள் என்பதில் வருத்தமுமே எஞ்சின.

மேலும் வானொலியில் நடக்கும் அழிம்புகளைச் சொல்வதானால் ஏடே கொள்ளாது. அதில் கொள்ளை போகும் பணம் தமிழ்மொழியை அழிக்கவும், தமிழர்களை ஒடுக்கவுமே செலவிடப் பெறும் தமிழர் பணமாகும். அப்பணத்தைப் பார்ப்பனர்கள் பங்கு போட்டுக்கொள்ளும் வகைகளைச் சொல்லி முடியாது. எவ்வளவு சிறந்த மொழிப் புலவ ரானாலும், இசைப் புலவரானாலும் தன்மானமுள்ள தமிழர்களானால் அவ் வானொலி நிலையங்களின் முற்றங்களிலும் ஒதுங்க முடியாது. தமிழகத்தின் தனிப்பெரும் புலவர்களாகிய மறைமலையடிகள், பாவாணர் ஆகியோரின் குரல்களை இவ் வானொலி நிலையங்கள் ஒரு முறை கூடப் பயன்படுத்திக் கொண்டதே இல்லை. ஆரியப் பார்ப் பனரின் தமிழ அடிவருடிகளே வானொலி நிலைய நிகழ்ச்சிகளுக்கு அங்காந்து கிடந்து இடம் பிடிக்கின்றனர். பார்ப்பனரின் யானை வாய்களுக்குத் தப்பி விழும் எச்சில்களே இவ் வெறும்புகளுக்கு நல்லுணவாகப் பயன்படுகின்றன. அப் பெருமையில் இவர்கள் தலை கால் புரியாமல் நடந்து கொள்ளுகின்ற வகைகள், இவ் வேதுங்கெட்ட தமிழர்களுக்கும், அவர்களின் கைகளில் உள்ள உலகின் உயர்ந்த மொழியாகிய தமிழுக்கும் மறைமுகமான கேடுகளாகவே விளங்கு கின்றன. இவ் வானொலிப் புலவர்கள் வடமொழிப் பெயர்களாகக் காட்டுகின்ற இசைப் பெயர்கள் முழுவதும் திரிக்கப் பெற்ற அல்லது மொழிபெயர்த்துக் கொள்ளப் பெற்ற தூய தமிழிசைப் பெயர்களே என்பதைத் தமிழிசை வல்லார்கள் நன்கு உணர்வர். இசைப் பேரரசு, பண்ணாராய்ச்சிப் பாவாணர் குடந்தை சுந்தரேசனார் இவ்வகையில் செய்து வருகின்ற ஆய்வுரைக்கு எந்தப் பார்ப்பானும் செவிமடுத்த தாகத் தெரியவில்லை. அவர்க்கு முந்தைய விபுலானந்த அடிகளின் அரும்பெரும் ஆய்வுரைகளும் புறக்கணிக்கப் பெறுகின்றன. இற்றைக் கருநாடக இசை முழுவதும் தூய தென்தமிழ் இசையேயாகும் எனத் தம் நுண்மாண் நுழைபுல வன்மையால், உரக்கப் பேசி மெய்ப்பித்து வருகின்றார் என்னும் கரணியத்தாலேயே, இசைப்பேரறிஞர் குடந்தை சுந்தரேசனார்க்கு வானொலியிலும், பிற இசை நிகழ்ச்சி களிலும் இப் பார்ப்பனர்கள் இடந்தருவதே இல்லை. இதையறிந்து ஒவ்வொரு தமிழனும் நெஞ்சு புழுங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

நாம் தமிழுக்கோ தமிழினத்திற்கோ ஆக்கம் உண்டாகும்படி பட்டிமன்றமோ, மாநாடோ ஊரே வியக்கு மளவிற்கு நடத்தி வானொலித் துறைக்குச் செய்தி யறிவித்துக் கேட்டுக் கொண்டாலும்

கூட, அவர்கள் வந்து அதைப் பதிவதும் இல்லை; வானொலியில் ஒலிபரப்புவதும் இல்லை. ஆனால் அவர்கள் இன ஆக்கத்திற்கும் பெருமைக்கும் உகந்தவாறு, இராமாயணச் சொற்பொழிவோ, பாரதக் கதைப் பட்டிமன்றமோ, போன்று 'அவாள்' இன நிகழ்ச்சிகள் எது நடந்தாலும் ஒரு நிகழ்ச்சியைக் கூட விடுவதில்லை. எங்கேனும் ஒரு சிறிய இடிந்த கோவில் புதுப்பிக்கப் பெற்றுக் குடமுழுக்குச் செய்யப் பெற்றால் கூட அதன் மேளதாளங்கள் உட்பட அத்தனை நிகழ்ச்சிகளையும் ஏதோ ஓர் ஊசைப் பார்ப்பானையே, பார்ப்பனத்தியையோ விட்டு நேர்முக வண்ணனை செய்து வானொலியில் போட்டு விடுவார்கள். ஒரு முறைக்கு இருமுறைகூட அத்தகைய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் பெறுவதை ஊன்றிக் கவனிப்பார் அறிந்திருக்கலாம். அவர்கள் வீட்டுச் சமையல் திறங்கள் கூட, அம்மாமிகளால் அன்றாடம் வானொலியில் திக்கித் திக்கிச் சொல்லப்பெற்று அமர்க்களப் படுத்தப் பெறுகின்றது என்றால், பிறவற்றிற்குக் கேட்கவே வேண்டுவதில்லை. 'கிரிக்கெட்' என்னும் மட்டைப்பந்து விளையாட்டை வானொலியில் போடுவதும் அவாள் இனத்துக்கான ஒரு பொழுது போக்கிற்காகவே ஆகும். அக் காலங்களில் சிறிய வானொலிப் பெட்டியும் கையுமாக அலையும் அவாள் இனச் சில்லுண்டிகளும் இப்பி இளைஞர்களும் இளம் பெண்டிர்களும் தெருவுக்குத் தெரு, அலுவலகத்திற்கு அலுவலகம் அடிக்கும் கொட்டங்களுக்கு அளவே இல்லை. நம் இளைஞர்கள் அதில் அவ்வளவு ஈடுபாடு காட்டுவதே இல்லை. சிற்சில விடங்களில் அவர்களுடைய பகடிப்பேச்சுக்கு ஆளாகக் கூடாதே என்பதற்காக, அவர்களுடன் சேர்ந்து தலையாட்டும் தமிழின இளைஞர்களைக் கூட அரிதாகத்தான் பார்க்க வியலும். அண்மையில் தஞ்சையில் உ. த. க. நடத்திய தமிழன் பிறந்தகக் கருத்தரங்குச் செய்தியை வானொலிக்கும் செய்தித் தாள்களுக்கும் அறிவிந்திருந்தும் அதைப்பற்றி ஒரு செய்தியும் போடாத வானொலியும் பார்ப்பன இதழ்களும் திருவனந்தபுரத்தில் ஐந்து நாட்கள் நடத்திய இராமாயண ஆராய்ச்சி மாநாட்டைப் பற்றிய செய்திகளை மிகுந்த அளவில் விளம்பரப் படுத்தின. மொத்தத்தில் சொன்னால் வானொலி நிலையங்கள் பார்ப்பான் வீட்டுச் சமையலறைகள்! 'அவாள்' இனம் சேர்ந்து அரட்டையடிக்கும் தெருத் திண்ணைகள்! அவர்கள் ஒருங்குகூடிப் பொழுதுபோக்கும் திருவல்லிக் கேணிக் கடற்கரைப் பகுதிகள் என்று சொல்லலாம்.

பொதுவாக வானொலித் துறையிலும் சரி, கலை, இசை, நாடகத் துறையிலும் சரி ஒன்றுல் ஆரியப் பார்ப்பனனுக இருத்தல் வேண்டும்; அன்றுல் அவனடி தழுவிய தமிழக் கேடர்களாகவோ, அவன் வேத, புராண, இதிகாசக் கருத்துகளைப் பரப்பும் வகையில் பாடுபடுபவனுகவோ இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் முன்னுக்கு வர முடியும்; அப்பொழுதுதான் அவனை அவர்களுடைய தாளிகைகள் புகழும்; வானொலிகள் இடந்தரும்; நாடகமேடைகள், திரைமேடைகள் அவனுக்கு வழிவிடும். இல்லெனில் அங்கங்கே அவனுக்குத் தாழிடப்படும்.

திரைப்பாட்டாசிரியர் கண்ணதாசன், தி.மு.க.வினின்று விலகி அவர்களைத் தழுவிக் கொண்ட பின்னரும், ஏ. பி. நாகராசன் அவர்களின் புராணக் கருத்துக் கதைகளையே தொடர்ந்து படமெடுத்த பின்னரும், நாடக நடிகர் மனேகர் அவர்களைச்சார்ந்து நாடகங்களை அரங்கேற்றின பிறகும், திருவாட்டி இசைப் பேரரசி எம். எசு. சுப்புலட்சுமி அவர்கள் இனமாகவே மாறிய பிறகுந்தான் அவர்களைப் பார்ப்பனர்கள் வானளாவப் புகழத் தொடங்கினர். எம்.சி. இராமச்சந்திரனை இராசாசி வாழ்த்திய பின்னரே பார்ப்பன இதழ்கள் அவருக்கு விளம்பரங்கள் கொடுத்தன. அவர்களின் இனத்தில் ஒரு சிறுவனே சிறுமியோ கலையுலகத்தில் கால்வைத்தாலும் சரி, அவர்களைப்பற்றி அவர்களின் இதழ்கள் எழுதுகின்ற பாராட்டுரைகளும், புகழ்ச்சி மாலைகளும், நம்மினத்தவரின் மிகச்சிறந்த கலைஞர் ஒருவருக்குக்கூட கிடைப்பதில்லை. இவ்வாறு கலைத்துறையும், வானொலித்துறையும் பார்ப்பனரின் அனைத்ததிகார வல்லாண்மையின் கீழ், நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்யப்படும் அவர்களின் சூழ்ச்சிக் கிடையில் சிக்குண்டு ஆட்பட்டிருப்பதைப் பார்த்தால், தமிழர்கள் இனி எதிர்காலக் கலையுலகத்தில் இடம் பெறுவார்களா, பெற்றுல் முன்னுக்கு வருவார்களா என்றெண்ணவே அச்சமாக விருக்கின்றது.

நூல் வெளியீடுகளிலும் பார்ப்பனர்கள் நுழைந்து குழப்பாமல் இல்லை. செயதித்தாள் துறையில் இவர்கள் எப்படி உள்ளே புகுந்து குட்டை குழப்புகின்றனரோ, அப்படியே நூல் வெளியீட்டுத்துறையிலும் மிக மும்முரமாக ஈடுபட்டுத் தம் பழைய வேத, புராண, இதிகாசங்களுக்கே மிகுந்த விளம்பரங்களைச் செய்து வருகின்றனர். பொதுவாக இவர்கள் எழுதுகின்ற தமிழ் நடையோ கருத்துகளோ

வெளிப்படுத்தும் முறையோ தனி. அந் நடையைக் கொண்டே கருத்துகளை வெளிப்படுத்தும் முறையைக் கொண்டே இவர்களின் உட்கிடையை உணர்ந்துகொள்ளலாம்.

'காவிரித்தண்ணீர்' என்று இவர்கள் எழுதுவதே இல்லை. 'காவிரிஜலம்' என்றுதான் தினமணி எழுதும். அண்மையில் தினமணியில் பொங்கல் திருவிழா மகா சங்கராந்தி என்றே குறிக்கப் பெற்றது. 'இராசாசி நினைவாலயத்துக்கு இவர்கள் தரும் விளம்பரம், காந்திக்குக்கூடத் தந்ததில்லை. 'தமிழகத்தில் இராசாசி காலடிபட்ட இடங்களையெல்லாம் 'புண்ணியதல மாக'க் கருதவேண்டும்' என்று 'சுதந்திர'க்கட்சி சா. கணேசன் வெளிப்படுத்திய கருத்தை இவர்கள் மிகப்பெருமையுடன் வெளியிட்டுக் கொண்டார்கள். (சா. கணேசன் மூளையில் இவ்வளவு அடிமைத்தனம் புகுந்திருக்கக் கூடாது). 15—1—73 துக்ளக்கில் 'சோ' இவர்கள் இனத்தலைவர் இராசாசியைப்பற்றி இப்படி எழுதியிருந்தார்:

"இராஜாஜியைப் பாராட்டுவதற்கோ அல்லது அவரிடம் குற்றம் காண்பதற்கோ அவருக்கு நிகரானவர்கள் யாரும் இந்நாட்டில் இல்லாமல் போய் விட்டார்கள்...மனம், சிந்தனை, வாக்கு, செயல் எல்லாவற்றிலும் பரிபூரணத் தூய்மையுடன் விளங்கிய ஒரு அசாதாரணமான மனிதரை மிகச் சாதாரணமாக மதித்துவிட்ட மடத்தனத்தின் விளைவுகளிலிருந்து இந்த நாடு என்று விடு படுமோ தெரியாது...இராஜாஜி தெய்வநம்பிக்கை மிகுந்தவர். அந்த ஒரு காரணத்திற்காகவாவது அவர் வாழ்ந்த இந்தப் 'பூமி' யை இறைவன் காப்பாற்றட்டும்"

—எப்படி? துக்ளக் இராமசாமியின் தூக்கி வைத்துப் பேசும் தன்மை. 'அவாள்' இனத்துத்தலைவர் என்றால் அவர் உலகத்துக்கே தெய்வம்; அவர்களைவிட மேம்பட்டவன் ஒருவனும் இருக்க முடியாது; அல்லது இருக்கவும் கூடாது என்பது பார்ப்பனர்களின் ஒருமித்த கருத்து. இராசாசிக்கென்றே சில தனித்தன்மைகள் உண்டு. அவை அவருக்குத்தாம் சொந்தம், அவர் தன்மைகள் பிறர்க்கு எப்படிவரும்? பெரியார் இராமசாமியின் தனித் தன்மைகள் எப்படி 'துக்ளக்' இராமசாமிக்கு வரமுடியாதோ, அப்படியே இராசாசியின் தன்மைகள் ஒரு கந்தசாமிக்கு வரமுடியாது. மற்றபடி இராசாசி என்ன

உலகத்துக்கே, அல்லது இந்தியாவுக்கே தெய்வமா? அவரைப்போல் நாட்டிற்குழைத்தவர்களே இல்லையா? பார்ப்பன இனத்தலைவர் ஒருவர் இறந்து போனால், அவர் வாழ்ந்ததற்காக இறைவன் இந்த பூமியைக் காப்பாற்றட்டும் என்றால் அவர் இருந்தபோது ஏன் இதைக் காப்பாற்றவில்லை? 'துக்ளக்' சோ ஏன் இறைவனிடம் அப்பொழுது பரிந்துரை செய்யவில்லை. இறைவன் என்றால் அவன் பார்ப்பன இனத்துக்கு மட்டுந்தானா சொந்தம்? அவர்களுடைய பாட்டனா அவன்?

இவற்றிலிருந்தெல்லாம் என்ன தெரிய வருகிறது என்றால், அவர்கள் எழுதும் எழுத்தெல்லாம் அச்சாகி வருவதற்கான வாய்ப்புகளை அவர்கள் வலிந்து ஏற்படுத்திக் கொண்டு, மக்களை எந்த அளவில் என்றென்றும் மடயர்களாகவே, தங்கள் நலவாழ்வுக்குத் துணை போகின்றவர்களாகவே மாற்றிக் கொள்கின்றார்கள் என்பதை நம்மக்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும் என்பதுதான். சொல்வதைச் சொன்னால் கேட்பாருக்குக் கொஞ்சமேனும் மதி இழக்கத்தான் செய்யும். அவர்கள் சொல்லுவதைக் கொஞ்சம் கவனித்தால் போதும்; எந்த நோக்கத்தில் அவர்கள் சொல்கின்றார்கள், எந்த நோக்கத்திற்காகச் சொல்கின்றார்கள் என்பனவெல்லாம் விளங்கிக் கொள்ள முடியும்.

'துக்ளக் 'இராமசாமி எழுதிவரும் 'வாசிங்டனில் நல்ல தம்பி' எனும் தொடர்கதையில் வரும் கதைத்தலைவனாக இப் பொழுதுள்ள முதலமைச்சரைத்தான் கிண்டல் செய்து எழுதுகின்றார் என்பது எல்லாருக்குமே வெளிப்படையாகத் தெரியும். அதைப் பற்றிய ஆய்வுகள் இருக்கட்டும். ஆனால் அதில் நல்லதம்பிக்குத் துணையாக வருபவர்களின் பெயர்களையும் அவர்கள் பேசிகொள்கின்ற தமிழ்(!)உரையாடல்களையும் பார்த்தாலே 'சோ' என்னும் இருபதாம் நூற்றாண்டுப் பார்ப்பானுக்குத் தமிழினத்தின் மேல் எவ்வளவு எரிச்சல், வெறுப்பு இருப்பதைக் கண்டு கொள்ளலாம். நல்லதம்பியின் நண்பன் பிசாசு முக்கண்ணனும்! இன்னொருவன் உலக்கைக் கொழுந்தாம். எப்படி! வேடிக்கைக்காக இப்படி எழுதுவதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை இழிவுபடுத்துவதும் தமிழ்மொழியைத் தாழ்த்துவதுந்தான் 'துக்ளக்'கின் நோக்கம். தனக்கு நேர் எதிரிடையான ஓர் இன அரசனின் பெயரைத் தனக்கே உரிய 'கிண்டல்' மனப்பான்மையுடனும் கோமாளித்தனமாகவும் சூட்டிக் கொண்டு, இப் பிராமணா வழக்கறிஞன் எழுதிவரும் கதைகளைப்

போலத்தான் அன்றைய இராமாயண, மகாபாரதங்கள் எழுதப் பெற்றன. நல்லதம்பிக் கதையில் வரும், இட்சுகாக் பர்ட்டன், நிக்சன், கீசிங்கர் முதலிய உண்மை மாந்தர்களையும், நல்லதம்பி, பிசாசு, உலக்கைக் கொழுந்து முதலிய உறுப்பினர்களையும் எதிர்கால மக்கள் படிக்க நேர்ந்தால், முன்னையவர்களின் வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டு பின்னையவர்களும் வாழ்ந்துதான் இருக்கவேண்டும் என்று கருதிக் கொள்வார்களா இல்லையா? அப்படிக் கருதிக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தக் கோமாளியின் நோக்கம். மேலும் இந்தத் 'துக்ளக் 'இராமசாமி வைத்த பிசாசு, உலக்கைக் கொழுந்து முதலிய பெயர்களைப் போலத்தான் இராமாயணத்திலும் தமிழர்களுக்கு இழிந்த பெயர்களே சூட்டப்பெற்றிருக்கின்றன. கும்பகர்ணன் (கும்பம்-குடம்; கர்ணன்-காதன் = குடக்காதன்), மண்டோதரி (மண்டு-பானை; உதரம்-வயிறு = பானைவயிறி), சூர்ப்பநகை, (சூர்ப்பம்-முறம்; நகை-பல் = முறம்பல்லி) இராவணன், (இரவு வண்ணன்-கறுப்பன்) முதலிய பெயர்களும் இழிவான பொருள் தரும்படி வைக்கப் பெற்றிருக்கின்றன. நாம் அப்பெயர்களில் உள்ள இழிவுகளை அறியக் கூடாது என்பதற்காக அவை வடமொழியில் வைக்கப் பெற்றுள்ளதை அறியுங்கள்! அந்த இராமாயண, மகா பாராத இழிவுகளிலெல்லாம் உள்ள இழிவுகளை எடுத்தெழுதினுல் இவ் வேடு கொள்ளாது. இவ்விருபதாம் நூற்றுண்டின் இறுதியிலேயே, சென்னையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் ஒரு பார்ப்பனன், நம் இனத்தைப் பார்த்து இவ்வாறு கிண்டல் செய்து எழுதுவதும், நாம் அதைப் பொறுத்துக் கொண்டிருப்பதும் நேருமானுல், ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன், இவ்வினத்திஞல் நேர்ந்த-நம் முன்னோர் பட்ட-பாடுகளை நினைத்தும் பார்க்க முடியாதன்றோ? அக்காலக் கதைகளைச் சொல்லி இக்காலத்தில் அவர்களை வஞ்சம் தீர்க்க முடியாமற்போயினும், இக்காலத்தில் நம் கண்முன் நிகழும் அக்கொடுமைகளை நாம் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? எனவே நமக்கு அவர்கள் மேல் வளர்ந்து கொண்டுவரும் ஒரு வெறுப்புணர்ச்சிக்கும் அவர்களேதாம் பொறுப்பன்றி, நாமோ நம் செயல்களோ பொறுப்பாவதில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றை உணர்ந்தோ உணராமலோ இரக்கத்துக்குரிய திரைப்படப் பாட்டாசிரியர் கண்ணதாசன் என்னும் தமிழ்க் குடி(!)மகன், 'துக்ளக்'

இதழின் மூன்றும் ஆண்டு விழாவில், அங்குக் கூடியிருந்த கோமாளிக் கூட்டத்தைப் பார்த்து, 'வரும் தேர்தலில் முறை யாக முடிவுக்கு வா, 'துக்ளக்' உங்களுக்கு வழிகாட்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்" என்று பேசியிருக்கின்ருர். இதைவிட வெட்கங் கெட்ட தனம் வேறு என்ன இருக்க முடியும்? காமராசர் என்னும் தூய தமிழினத் தலைவனுக்குத் 'துக்ளக்' எனும் ஆரியப் பார்ப்பனனைப் பரிந்துரைக்கச் சொல்லித்தான் கண்ணதாசன் ஒப்போலை தேட வேண்டுமா? வெட்கம்! வெட்கம்!! இத்தகையதொரு நிலைக்கு வந்ததால்தான் தி. மு. க. வை முன்பே தென்மொழி கண்டித்தது; குற்றமும் சாட்டியது. இன்றுதி.மு.க அதன் விளைவையும் உணர்ந்து கொண்டு திருந்தி வருகின்றது. இன்னும் தி.மு.க. தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டிய நிலைகளும் பலவுள. ஆனல் திருந்தாத தமிழனைவிடத் திருந்தி வரும் தமிழனுல் தமிழுக்கும் தமிழினத்திற்கும் ஓரளவேனும் ஆக்கம் பிறக்கும் என்னும் கருத்திலேயே தி.மு.க வைத் தென்மொழி பாராட்டிக் காக்க முனைந்துள்ளது. (இந்நிலைக்குத் தென்மொழி மேல் கொதிப்படையும் 'கண்ணதாச'த் தமிழர்கள் ஆழ்ந்து எண்ணி முடிவு கட்டுவார்களாக!)

(தொடரும்)

பெருஞ்சித்திரனுர்.

இந்தி எதிர்ப்பு மறவர்

ஈழத்தடிகளுக்கு நன்கொடை

(பட்டியல் :6)		தொகை
	முன் பட்டியில் படி மொத்தம்	1649—00
80.	அம்பாலா வான்படை அன்பர்கள் (திரு. பெ. சுப்பிரமணியம் வாயிலாக)	40—00
81.	பர். திரு. சாலை இளந்திரையன், புதுதில்லி (3-ஆவது முறையாக)	50—00
82.	,, ,, (4-ஆவது முறையாக)	25—00
83.	புலவர் திரு. இராமச்சந்திரன், நெய்க்காரப்பட்டி	15—00
84.	திரு. தி. வ. மெய்கண்டார், சென்னை-4	2—00
85.	'தென்மொழி' ஆசிரியர் காஞ்சி சென்றிருந்தபோது அடிகளைப்பார்த்து நேரில் கொடுத்தது	25—00
	மொத்தம்:	1806—00

'தென்மொழி'க்கு நன்கொடை.

12-4-71 முதல் 7-6-71 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக,

	உருபா
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	4-00
திரு. அ. குமணன், மலேயம்	25-00
திரு. அருட்செல்வன், கெ. கல்லுப்பட்டி	2-00
புலவர் திரு. சா, அடல்எழிலன், திருவையாறு	1-50
திரு. வீ. இறையண்ணல், திருவையாறு	1-50
திரு. கு. தாமசு, செங்கிப்பட்டி	1-50
திரு. வி. செயச்சந்திரன் வான்படை	2-00
திரு. பொன். தமிழ்மாறன், நெய்வேலி	2-00
திருவாளன்மார் பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு. சின்னத்தம்பி (8-9 ஆம் முறையாக)	200-00
திரு. செல்வதுரை, மலேயம்	50-00
திரு. ப. முத்துச்சாமி அவர்கள் வழி இ. அம்மாப்பேட்டை அன்பர்கள்	18-00
திரு. சி. இராமச்சந்திரன், சேலம்-7	101-00
திரு. ஆர். என். வீரப்பன், மலேயம்	2-00
திரு. முத்துப்பாண்டியன், பறம்புக்குடி	5-00
திரு. சே. கதிரேசன். பாம்பூர்	51-00
திருமிகு இரா. தாட்சாயணி, சென்னை	1-00
திரு. மு. பழனி, கீழைக்கரை	10 00
திருவாளன்மார் பெ. புதுமைப்பிரியன், பெ. செல்லையா, பெ. அரசு, சின்னத்தம்பி 10-ஆம் முறையாக (தொடரும்)	150-00

பாவாணர் அவர்களின்

தமிழர் மதம்

தமிழன்பர் ஒவ்வொருவரிடமும் கட்டாயம் இருக்க வேண்டிய நூல்
விலை 5 உருபா
கிடைக்குமிடம்: தே. மணி
ஆ.1135-2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை, காட்டுப்பாடி விரிவு(வ. ஆ)

படித்துப் பயன் பெறுங்கள் !
புலவர் திரு. த. (சரவணத்) தமிழன் அவர்கள்
இயற்றிய இலக்கண நூல்

த மி ழ் நூ ல்

(பாவும் உரையும்)
விலை : உருவா 4—00
கிடைக்குமிடம்:— இயற்றமிழ்ப் பயிற்றகம்,
நடவாகனத் தெரு, திருவாரூர் (அஞ்சல்) தஞ்சை மாவட்டம்.

உலகத் தமிழ்க் கழகம் நடத்திய
தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கு

(செய்திச் சுருக்கம்)

கடந்த தி. பி. 2003, சிலை 17 (31—12—72) ஞாயிறு அன்று, தஞ்சை அரண்மனை இசை மன்றத்தில், உலகத் தமிழ்க் கழகம், தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கு என்னும் பெயரில் ஓர் அறைகூவல் மாநாட்டைக் கூட்டியது.

இம் மாநாட்டில் தமிழன் பிறந்தகம் குமரி நாடே என்னும் கருத்திற்குச் சார்பாக, மொழி ஞாயிறு, ஞா. தேவநேயப் பாவாணர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், பேரா. கோ. நிலவழகனார், திரு. சொல்லழகனார், ஆகியோர் தக்க சான்று காட்டி நிறுவுவதாகவும்,

பேரா. கே, ஏ. நீலகண்ட(சாத்திரியார்)ர் பர். சுநீதி குமார் சட்டர்சி, பர். தெ. பொ, மீனாட்சிசுந்தரனார், தனிநாயக அடிகள், பர். வி, ஐ, சுப்பிரமணியம் ஆகியோர் அக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாவிடில், தக்க சான்றுகள் காட்டி மறுக்க வேண்டுமென்றும்,

இவ்விரு சாரார் கருத்துகளையும் கேட்டு, மாநாட்டிறுதியில் திரு. குன்றக்குடி அடிகளார், திரு. காஞ்சி ஞானப்பிரகாச அடிகளார், திரு. அழகரடிகள், அரசவயவர் திரு. முத்தையா, திரு. கருமுத்து தியாகராசர், புதுப்புனைவாளர் கோவை. திரு. கோ. துரைச்சாமி (G. D. NAIDU) பர். திரு. மணவாள இராமானுசம், பர். திரு. வ. சுப. மாணிக்கனார், பெரும்புலவர் நீ. கந்தசாமி, உரைவேந்தர் திரு. ஒளவை. சு. துரைச்சாமி, பெரும் புலவர் திரு. மே. வீ. வேணுகோபாலனார், வரலாற்றறிஞர் திரு. மயிலை. சீனிவேங்கடசாமி, ஆகிய பன்னிருவரும் அடங்கிய நடுவர் குழு, அக்கொள்கைபற்றி, அறுதியும், உறுதியும், இறுதியுமான தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன.

அறைகூவல் மேலே குறிக்கப்பெற்ற மறுப்புக் கட்சியாளர்க்கும், அதன் படிகள், பர். திரு. கா.மீனாட்சிசுந்தரனார், பர். திரு. மு. வரதராசனார், பர். திரு. ந. சஞ்சீவி, பொழில் வாய்ச்சி (பொள்ளாச்சி) திரு. மகாலிங்கம் ஆகியோர்க்கும் தனித்தனி விடுக்கப் பெற்றதோடன்றி, உ. த. க. பொதுச்செயலாளர் புலவர். திரு. இறைக் குருவனார் நடத்திவரும் வலம்புரி என்னும் மாதஇதழ் வாயிலாகவும்

அச்சிடப் பெற்று அனுப்புவிக்கப் பெற்றன. பர். திரு. சுநீதிகுமார் சட்டர்சி, பேரா. கே. ஏ. நீலகண்ட சாத்திரி, பர். திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனர், ஆகியோருள், முன்னவர் இருவர்க்கும், ஆங்கிலத்திலும், பின்னவர்க்குத் தமிழிலுமாகத் திறவை மடல்கள் (Open Letters) வலம்புரி இதழ்வாயிலாக வெளியிடப் பெற்று அனுப்புவிக்கப் பெற்றன.

இக் கருத்தரங்கு அறை கூவல் மாநாடு, தி. பி. 2003, அலவன் 29–ஆம் பக்கல் ஞாயிறு அன்று, காட்டுப்பாடியில் நிகழ்ந்த உலகத் தமிழ்க் கழக ஆட்சிக் குழுவின் தீர்மானப்படி, கட்சித் தலைவரும், மொழிப்பேரறிஞரும், ஆகிய பெரும் பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களால் கூட்டுவிக்கப் பெற்றதாகும்.

இம் மாநாடு செயல்பெறுவதற் கென்று, தஞ்சை மாவட்ட உ. த. க. அமைப்பாளர் புலவர் திரு. த. ச. தமிழனர் அவர்களை வரவேற்புக்குழுத் தலைவராகவும், புலவர் திரு. சா. அடலெழிலனர் அவர்களைச் செயலாளராகவும்,திருவாளன்மார் பேரா. திருமாவளவன் அ. இளவழகன், அரங்க. திருமாறன், சி. இராசாங்கம், இரா. மருத முத்து ஆகியோரைச் செயற்குழு உறுப்பினராகவும் கொண்ட ஒரு செயற்குழு அமர்த்தப் பெற்றது. பொருளாளர் பொறுப்பு தலைமைக் கழகப் பொருளாளர் திரு. செங்கை. செந்தமிழ்க்கிழார் அவர்களிடம் ஒப்படைக்கப் பெற்றது. மாநாட்டின் செயற்பாடுகளை அவ்வப் பொழுது மடல் வழியாகவும், நேரில் சென்றும் உ. த. க. பொதுச் செயலாளர் திரு. இறைக்குருவனர் கவனித்தும், மேற்பார்த்தும் வந்தார்.

நடுவராக அழைக்கப் பெற்றவருள், பெரும்புலவர் திரு. மே. வீ. வேணுகோபாலனர் வரலாற்றறிஞர் திரு. மயிலை-சீனி வேங்கடசாமி, திரு. கருமுத்து தியாகராசர் ஆகியோர் தமக்கு உடல் நலமின்மையால் நிகழ்ச்சியில் பொறுப்பேற்க இயலாமைக்கு வருந்துவதாயும், மாநாடு வெற்றி பெற வாழ்த்துரைத்தும், மடல்கள் விடுத்து விட்டனர். ஏனையோருள் அறிவியலறிஞர் கோ. துரைச்சாமியார், பர். வ. சுப. மாணிக்கனர், பெரும்புலவர் நீ. கந்தசாமியார், உரை வேந்தர் திரு. ஔவை சு. துரைசாமி, திரு. குன்றக்குடி அடிகள், திரு. அழகரடிகள். காஞ்சி திரு. ஞானப்பிரகாச அடிகள் ஆகியோர் மட்டும் மாநாட்டில் கலந்து கொள்ள இசைவளித்திருந்தனர். ஆனல் மாநாட்டன்று, பெரும்புலவர் நீ. கந்தசாமியார், திரு. கோ. துரைச்சாமியார். பர். வ. சுப. மாணிக்கனர் ஆகிய மூவர் மட்டுமே வந்திருந்தனர். மற்றையோர் மாநாட்டிற்கு வரவியலாமை

பற்றிச் செய்தி விடுத்தனர். அச்செய்திகள் மாநாட்டின் முதல் நாளிலும் நிகழ்ச்சி நாளிலுமாக வந்துற்றன. திரு. காஞ்சி ஞானப்பிரகாச அடிகள் 'தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே' எனும் தம் கருத்தை ஒரு சிறு கட்டுரை வடிவமாக அனுப்பியிருந்தார்கள். (அக் கட்டுரை பின்னர் வெளியிடப்பெறும்.) பர். திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் மாநாடு வெற்றியாக நடைபெறுகவென முதலில் ஓர் அஞ்சலட்டையும், அறைகூவலுக்கு மறுமொழியாக ஒரு முடங்கலும் விடுத்திருந்தார். (அவர் மறுமொழி முடங்கலும் பின்னர் வெளியிடப் பெறும்).

மாநாட்டிற்கான ஏற்பாடுகளெல்லாம் முன்கூட்டியே செய்யப் பெற்றிருந்தன. குறித்த நாளுக்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே அறிக்கைகள் அச்சிடப் பெற்று, உலகத் தமிழ்க் கழக அன்பர் வழி நாடெங்கும் பரப்பப் பெற்றிருந்தன. உடன் பாட்டு அணி, எதிர்ப்பு அணி நடுவர் குழு ஆகியவற்றில் உறுப்பினராகக் கருதிய அனைத்துப் பேராசிரியர்களுக்கும், அறவோர்களுக்கும் முறைப்படி செய்திகள், அறிக்கைகள், அழைப்புகள், அறைகூவல்கள் முதலியன அஞ்சல்வழி விடுக்கப் பெற்றிருந்தன. வலம்புரி இதழில் வெளிவந்த மாநாட்டு அறிவிப்பு, தென்மொழி, தமிழம், செம்பரிதி ஆகிய கொள்கை யிதழ்கள் வாயிலாகவும் வெளியிடப் பெற்றிருந்தது. பெரிய பெரிய வண்ணச் சுவரொட்டிகள்வேறு மாநாட்டிற்கு ஒரு கிழமை முன் எல்லா நகரங்களிலும், ஊர்களிலும், உ.த.க. அன்பர்கள் வழி ஒட்டப் பெற்றுச் செய்தி கூடிய மட்டில் தமிழன்பர்கள் அனைவருக்கும் எட்டுமாறு ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. மலைநாட்டு அன்பர்கள் சிலரின் வேண்டுகோளுக்காகவும், பிற இன்றியமையாத ஓரிரு கரணியங்களுக்காகவும் மாநாடு தள்ளி வைக்கப் பெறுவதாக விருப்பதுபோல் ஒரு நிலை இடையில் தோன்றினும், அமைப்புக் குழுவின் முனைந்து முடிக்கப் பெற்ற செயல்களால் மாநாடு குறித்த நாளில் குறித்த விடத்தில் வந்திருந்த பேராசிரியர்களையும் புலவர்களையும் வைத்துக் காலத்தே தொடங்கியது.

கருத்தரங்கு தொடங்குவதற்கு முன் நீண்டதோர் ஊர்வலம் 31—12—72 ஞாயிறு காலை சரியாக 9-15 மணிக்குத் தஞ்சைத் தொடர்வண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டது. ஊர்வலத்தின் முன்னர், தென்மொழி ஆசிரியர், பாவலர் திரு. பெருஞ்சித்திரனார் பேரா. கோ. நிலவழகனார், கழகப் பொருளாளர் திரு. செந்தமிழ்க் கிழார், திரு. சின்னாண்டார் அவர்களும் பிறமாவட்ட அமைப்பாளர்களும், அணிவகுத்துச் சென்றனர். அவர்களுக்கு முன் பெண்டிர் சிலரும் ஓரணியாகச் சென்று கொண்டிருந்தனர், ஊர்வலத்தை

யொட்டிப் பக்க வாட்டில் கழகப் பொதுச் செயலாளர் திரு இறைக் குருவனுர், திரு. தமிழனுர், திரு. அடல் எழிலனுர் ஆகியோர் அவ்வப் பொழுது அணிகளைச் சரி செய்து கொண்டும், போக்கு வரத்துக்கு இடையூறின்றி ஒழுங்கு செய்து கொண்டும் சென்றனர். காவலர்களும் ஊர்வலத்துக்குக் காப்பாக உடன் வந்தனர். ஊர்வலத் தின் பின் கழகத்தலைவர் பாவாணர் அவர்கள் இன்னியங்கியில் வந்தனர்.

ஊர்வலத்தினர் 'அடிமைத் தமிழா விடிந்தது விழித்தெழு.' 'தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே!' 'தமிழ் வாழ்க, தமிழ் வெல்க'—ஆகிய முழக்கங்களை மாற்றி மாற்றி முழக்கிக் கொண்டே காந்திச்சாலை, கீழவீதி ஆகிய தெருக்களின் வழியாகச் சென்று காலை 10-15 மணியளவில் அரண்மனையை அடைந்தனர். அதன்பின் ஊர் வலத்தினர் புடை சூழ்ந்து நிற்க, மாநாட்டு வாயில் முன் நடப்பெற் றிருந்த கொடிக் கம்பத்தில், உ. த. க. தலைவர். திரு. பாவாணர் அவர்கள் உ. த. க. இலச்சினை பொறித்த கொடியினை ஏற்றி வைத் தார்கள். அறை கூவலின் அடையாளமாகக் கொடிக்கம்பத்தின் அருகில் நடப்பெற்றிருந்த நாவல் நறுங்கன்று ஒன்று நன்ருகத் துளிர்விட்டுப் பொலிவுடன் விளங்கியது.

காலை 10-30 மணியளவில் முதுபெரும் புலவர் நீ. கந்தசாமி அவர்களின் தலைமையில் மாநாடு தொடங்கியது. மேடையின்மிசை மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர், பெரும்புலவர் நீ. கந்தசாமியார், அறிவியலறிஞர் கோ. துரைச்சாமியார், பேரா. கோ. நிலவழகனுர், பேரா. வீ.ப. கா. சொல்லழகனுர், பாவலரேறு பெருஞ்சித்திரனுர் முதலியோர் பெருமிதத்துடன் அமர்ந்திருந்தனர். குடந்தை இசைப்பேரறிஞர், ப. சுந்தரேசனுர் அவர்கள், கீழ்வரும் தமிழ்வாழ்த்தைப் பாடி அரங்கைத் தொடங்கி வைத்தார்கள்.

மங்கலம் ஓங்க வளர்ந்து நலந்தரு
மாமொழி தாய்மொழியே! —எங்கள்
பண்புரி கின்ற முதல்தெய்வ மாகப்
பராவும் தமிழ் மொழியே!—இரு
செங்கையி லேந்தியெந் தாயார் முதற்செவி
யூட்டிய செம்மொழியே!—அவர்
பொங்கு முலைதரு பாலோ டெனக்குப்
புகட்டிய திம்மொழியே!—அதனுல்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய
என்றடி வாழ்த்துவமே!

நண்ணு மிளமைப் பருவத்தி லே முதல்
நாவை யசைத்த மொழி!—எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்
கருத்தோ டிசைத்த மொழி!—எந்தம்
எண்ணத்தைக் கூறற்கு நானென்று முன்வந்
திருந்த திருந்து மொழி!—வேற்று
வண்ணப் பிறமொழி கற்க வுதவிய
வன்மை பொருந்து மொழி!—அதனுல்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய
என்றடி வாழ்த்துவமே!

தொன்று தொட்டே,பே ரறிவாள ரீட்டிய
செம்பொருள் தேக்க மொழி!—தன்னை
நன்றறி வார்க்கப் புதையல் திறந்திட
நாளெண்ணிக் காக்கு மொழி!—நாங்கள்
இன்று படைக்கும் பெருமைக்கெ ல்லாம் முதல்
ஈந்து புரக்கு மொழி!—செய்யும்
நன்றிகொன் றோருக்கும் நன்னயம் செய்து[அ]வர்
நாண உரைக்கும் மொழி!—அதனுல்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய
என்றடி வாழ்த்துவமே!

அஞ்செழுத் தே, தமிழ்க் கென்பவர் பேதை
யறிவை நகைக்கு மொழி!—சொல்லின்
அஞ்செழுத் தே, இக மும்பர மும்தரு
மாமென் றுரைக்கு மொழி!—இன்னும்
எஞ்சு பிறமொழி யிற்பல தன்பேர்
எழுதற் கரியமொழி!—கல்லாம்
நெஞ்சுமு ருக்குந் திருவாச கத்தைமுன்
னே,கொள் பெரிய மொழி!—அதனுல்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய
என்றடி வாழத்துவமே!

பற்றுவைத் துப்பிற நாட்டு மொழியைப்
பயின்று மறந்தோமோ—நம்
உற்ற தமிழ்முகம் பாராத குற்றத்தால்
இடித்து றைந்தோமே—நாங்கள்
கற்ற பிறகலை யைத்தாய் மொழிக்கண்ணே
காட்டிப் பெருக்குவமே!—திசை

முற்றவும் எம்மொழி யின்வளம் சாற்றி
முரசு முழக்குவமே!—அதனால்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய
என்றடி வாழ்த்துவமே!

தமிழ்வாழ்த்திசை முடிவுற்றதும் தலைவர் அவர்கள் புலவர் குழந்தை, இராசாசி ஆகியோரின் மறைவுக்காக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றிக் கூட்டத்தினரை இரு நிமையங்கள் எழுந்து அமைதியாக இரங்கல் தெரிவிக்கக் கேட்டுக்கொண்டார். கூட்டமும் இரங்கல் தெரிவித்தது.

மாநாட்டுத் தொடக்கத்தில் அரசர் இசையரங்கம் முக்காற்பங்கு நிறைந்திருந்ததேனும், நாழிகை செல்லச் செல்ல, கூட்டம் வழிந்து நிரம்பியது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் கற்றறிந்த பெருமக்களாகக் காணப்பெற்றனர். உலகின் முதல் தாய் மொழியாகிய தமிழுக்கும், தமிழனின் பிறந்தகப் பெருமைக்கும் வழி வகுக்கும் வரலாற்றுச் சிறப்புற்ற கருத்தரங்காகையால், வெளியூரினின்றும், உள்ளூரினின்றும் தமிழின்மேல் அன்பும் அக்கறையும் தலைவர்கள்பால் நம்பிக்கையும் நன்மதிப்பும் கொண்ட அனைத்துத் தமிழன்பரும் அறிஞரும் குல மத வேறுபாடின்றிக் கூடியிணைந்திருந்த காட்சியினைக் கண்டுதான் களிகூர முடியும். பார்ப்பனரின் ஒட்டு மொத்த இருட்டடிப்புக் கிடையிலும் தமிழ்ப் பகைவர்களின் தீராத பழியுரைகளுக்கு நடுவிலும், கூடியிருந்தே குழிபறிக்கும் கொள்கைக் கரவாளர்களின் ஊடாட்டக் கழுத்தறுப்புகளுக் கிடையிலும் தமிழன்பர்கள் தங்கள் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்கும் இக் கருத்தரங்கிற்கு மிகுந்த அளவில் ஆர்வத்துடன் வந்திருந்தனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

முதற்கண் மேடைமீதிருந்த அறிஞர்கள் பேராசிரியர்கள் அனைவரும் மலர்மாலைகள் சாற்றி வரவேற்கப் பெற்றனர். வரவேற்புரையை மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவரும், தஞ்சை மாவட்ட உ. த. க. அமைப்பாளரும், திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகத் தலைவரும், திரு. வி. க. படிம வைப்புத்திட்ட அமைப்பாளரும், வீறுபெற்ற தனித் தமிழன்பரும், ஓயாவினையும், சாயாக் கொள்கையும், தேயாப் பூட்கையும் கொண்ட மறவரும் ஆகிய புலவர் திரு. ச. தமிழனார் அவர்கள் நிகழ்த்தினார். அவ்வுரை வருமாறு:

மேடைமிசை அமர்ந்திருக்கின்ற அறிஞர் பெருமக்களே! நெஞ்சத்துப் படியினிலே வரிசையாய் அணியாக அழகாக இருக்கின்ற தமிழ் அன்பர்களே! அனைவரையும் வணங்குகின்றேன்.

வரவேற்புரைக்கு நிகழ்நிரலிலே முப்பது மணித்துளிகள் போட்டிருந்த தென்னவோ உண்மை! ஆனால் நாம் ஊர்வலம் தொடங்கி, வந்து, சீர்வளம் செய்து, நம் ஆர்வல நெஞ்சை அடித்துடிப்போடு, முடித்துரை நாட்டிட இருக்கும் நெஞ்சை நினைத்து நான் சில சொல்ல விழைகின்றேன்; விரும்புகின்றேன்.

அமர்ந்திருக்கின்ற அனைவரும் அரிமாக்கள்! அதன் மேடை மிசை தாடையசைத்துச் சொல்லவிருக்கின்ற அத்தனையரும் அறிஞர் பெருமக்கள். இவர்க் கிடையேயுள்ள கருத்துகள் முன்னமேயே பரிமாறி முடிக்கப் பெற்றவை. நம் நெஞ்ச இலையிலே அவர்கள் இட்ட படையலிலே புதுப்பொங்கல் ஏதுமில்லை இப்போது என்றாலும், இதனை நாடறிய, உலகறியச் சொல்லுதற்கொரு நாளெடுத்து, அதற்குச் சூளெடுத்து, வர ஆளெடுத்து நம் தோளெடுத்து நம் திருத் தாளெடுத்து இந்தநாளடுத்துவந்திருக்கின்ற நீங்களெலாம்வேலெடுத்துவாளெடுத்து வரவில்லையே என்ற ஏக்கமில்லை எங்கட்டு. ஏன் என்றால் இந்நாள் நன்னாள்! பொன்னாள்! உலகிற்கு எச்சரிக்கை விடுக்கின்ற முச்சரிக்கை நாளென்று நான் முழுமையாக உணர்கின்றேன். அந்த முழுவுணர்வோடு ஒன்று சொல்வேன். வந்திருக்கின்ற அனைவரையும் வரவேற்கின்ற முகத்தானே கூறுகின்ற சில செய்தியிலே, இருக்கின்ற நடுவர்களை உங்கள் இருவிழிகள் இல்லை யார், யார் இல்லை எனத் தேடுவதை நான் அறிகின்றேன். அதோடு கூட நாடுவதையும் நாம் அறிகின்றோம். நமக்கு வேண்டிய ஒரு பொருள் நடுப்பொருள் – அது இருக்கின்றதா என்ற விருப்போடு பார்க்கின்ற விருப்பத்தின் மேலாக இருக்கின்ற அனைவரும் வந்து அணைப்பாக இருக்கின்றார்.அரவணைப்பார் யாரென்னும் பார்க்கின்றோம். இருக்கின்றார்; வேண்டுவோர் அனைவரும் இருக்கின்றார்; நாம் விரும்புவோர் அனைவரும் இருக்கின்றார் என்ற ஆறுதல்–தேறுதல் பற்றியில்லை, நெஞ்சில் சுமையேறுதல் பற்றியில்லை, நாம் ஊறுதல் நா ஊறுதல் ஊற்றூறுதல் போலக் கருத்திருக்க வேண்டும் என்பதுபற்றி உங்கள் நினைவிருக்கும் என்று நான் எண்ணுகிறேன்: அந்த எண்ணத்தோடு சில சொல்ல விழைகிறேன்.

வந்திருப்போர் நாடறிந்தவர்கள். நம் நாவறிந்து சொல்லுதற்கேதும் தேவையில்லை. ஆனாலும் நம் கோணத்தே–முனையினிலே சொல்லுதற்கு என்னவென்று சொல்லுதற்குச் சில. அவ்வளவே!

தமிழ் வாழ்த்தை இசைமன்றத்தே இன்றைக்கே இசைமன்றமாக்கிக் காட்டுதற்குத் தமிழ்வாழ்த்துப்பாடி முடித்திருக்கின்றார் நம்முடைய பண்ணாய்வாளர். அவரை வருகவென வரவேற்கின்றேன். இன்றைக்குத் தமிழ் இசைக்கென்று ஒற்றைத் தனிமாந்தராய்த் தமிழ்

நாடு முழுதும் முழங்குமவர் நம்முடைய பற்றைப் படையினிலே பற்று வைத்தார். எனவே அவரை வருக வென்கின்றோம். அடுத்து, வரவிருக்கின்றோர்க்கு நாம் அழைப்பு விடுத்தது பதினொரு பன்னிரு நடுவர் என்றாலும், இசைவு தந்தவர்கள் ஆறு நடுவர்கள். அவர்கள் அச்சேறியவர்கள். அதற்குப் பிறகு வந்திருக்கின்ற நடுவர்களிலே ஓரிரு நடுவர்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள்; பலர் வந்துவிட்டார்கள்; சிலர் வருவார்கள். இப்படி இருக்க, இடையினிலே வரவேற்பு வருவோரையும் தழுவிச் சொல்லுதல் பற்றி இருப்பார்க்கு மட்டும் நம் வரவேற்பைக் கூறி வருவார்க்கு நம் விருப்பத்தைக் கூறிவைப்போம் என நினைக்கின்றேன். முதற்கண் அமைக்கப் பெற்ற தலைவர் பெரும்புலவர் நீ. கந்தசாமி அவர்கள் வருவதற்குமுன் குறித்த நேரத்தில் கூட்டம் தொடங்கப்பெற வேண்டு மென்பதற்காக இடைநேரத் தலைவராக விருந்த பேராசிரியர் கோ. நிலவழகனாரை வரவேற்று வாழ்த்துகின்றேன். அடுத்து வீ.ப.கா. சொல்லழகனார். அதோடு வெல்லழகனார். அந்த நல்லழகனாரை வரவேற்கின்றோம்.

அடுத்ததாக வந்திருக்கின்ற பெரும்புலவர் பள்ளியகரத்தவர் நீ. கந்தசாமி[பிள்ளை] தமிழ்ப் பொழில் ஆசிரியராக விருந்தவர்; அவரையும் வரவேற்கின்றேன். அடுத்து தொழில்தகை அறிவியலறிஞர் கோ. து: உடல் நலம் கேடாக இருந்தும் வந்து கலந்து கொண்டார். அவர் வரவு நமக்குப் பெருமை நல்குவதாகும். அவரையும் வரவேற்கின்றேன். அடுத்து ஒரு தனி ஞாயிறாக இருந்து உலாவரும் மொழி ஞாயிறு பாவாணர் அவர்களையும் பிற அறிஞர்களையும் வரவேற்கின்றேன். அனைவரும் வந்திருப்பர் நீங்களெல்லாரும் செவிதந்திருப்பீர் கருத்தெடுத்துச் சென்று பகையம்பு கொள்ளுமாறு எய்வீர் என்று நம்பிக்கை இருக்கின்றது. அடுத்ததாக வந்திருக்கின்ற அனைத்துப் பெருமக்களும் கருத்துப் படையல் செய்கிறபோது, படையிலிட முனையலுறும் போது எல்லாம் பிற கூட்டம் போலாது, அமைதியாக இருந்து கேட்பீர்என்று விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு ஏகடியமாக அல்லது பகடியாகத் தோன்றலாம். ஆனால் நெஞ்சிற் பதித்துக்கொள்ளுங்கள். இது தஞ்சையிலே நடக்கின்ற வரலாற்றுத் திருப்பத்திற்குரிய நிகழ்ச்சி, உலகம் முழுதும் என்றோ ஒருநாள் எட்டத்தான் செய்யும்; இரட்டை உலக முனையிலே கருத்து இங்கொரு நாள் இப்படியாய் பேசப்பட்டது என்று வருந்தலைமுறை சொல்லி வாழ்த்தத்தான் செய்யும். இதில் ஐயமில்லை இது வரலாற்றாய்வாளர்க்கு ஓர் அடிப்படையைச் செய்து கொடுக்கின்ற நாள்.

அடுத்ததாக நம்முடைய பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கள்

ஒரு கூட்டத்திலே நெஞ்சு நிமிர்ந்து சொன்னார்கள். அது இன்னும் என் காதிலே ஒலித்துக்கொண்டே யிருக்கும். சின்னாள்கட்கு முன்னே சதுரங்க ஆட்டக்காரர்கள் இருவர் உலக அரங்கத்திலே ஆடிய அந்தச் சதுரங்கப் போட்டியை, உலகம் முழுதும் உற்று நோக்கியது. தொலைக்காட்சி, வானொலி வழியாகவும் அதை ஒலி பரப்பினார்கள். அந்த வெட்கங்கட்ட வெறும் பொழுது போக்குக்குரிய சொக்கட்டான் ஆட்டத்திற்கே அத்துணை மதிப்புக் கொடுத்தது உலகம். ஆனால் இந்த வரலாற்றுக் கருத்தரங்கத்திற்கு அரசுந் துணையில்லை; நாடுந் துணை யில்லை; நாம் தான் இதற்கு வழிசெய்தோம். இந்த நிகழ்ச்சி ஊன்றி நிற்கும் நிகழ்ச்சி. இது நாளையும் நாளை மறுநாளும் நினைவில் நிற்கும் என்பதை உறுதியாக எண்ணிக் கொள்ளுங்கள். இறுதியாக இந்தக் கருத்தரங்கிற்கு வந்த உங்களையும், கருத்துரை யாற்றவந்த அறிஞர் பெருமக்களையும் வாழ்த்தி வரவேற்கின்றேன். தனித்தமிழன்பர்களே உங்கள் காலடிபட்ட பின்னுவது இந்தத் தஞ்சை தனித்தமிழ் உணர்வு பெற்றுத் திகழ்வதாகுக என்று கூறி அனைவரையும் வரவேற்று அமைகின்றேன் வணக்கம். [தொடரும்]

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

இனித் தமிழாவது தனித்தமிழேயென, எங்கும் எவர்க்கும் இனிது விளக்கிடத், திங்கள் தோறும் உங்கள் கையுறும் தென்மொழி யணியில் இன்னும் ஓரிதழ்!

தீச்சுடர்

சிறப்பாசிரியர் : பாவலர் பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்: க. வெ. நெடுஞ்சேரலாதன்

தனியிதழ் 00-25 ஆண்டுக் கட்டணம் 3-00

O தி. பி. 2004. சுறவத் திங்கள் முதல் வெளிவருகிறது.

O இதழுக்கு 50 காசு மேனி முன்பணங்கட்டும் முகவர்கள் எழுதுக!

தீச்சுடர், மதுரை-10

தமிழ் நிலத்தை மீட்போம்!

தென்மொழிக் கொள்கை

(தமிழக விடுதலை)

இரண்டாவது மாநாடு. மதுரை.

தி. பி. 2004, விடை 27, 28 (9, 10 சூன் 73 காரி, ஞாயிறு)

மொழியாலும் நெறியாலும் அயலினத்தவர்களுக்கு மூவாயிரம் ஆண்டாக அடிமையாகிக்கிடப்பது மட்டுமின்றி அச்சிறுமை வாழ்வையே தன் பெருமை வாழ்வாகக் கொண்டு, தாழ்ந்து கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்பி, உரிமை உணர்வும் விடுதலை வேட்கையும் ஊட்டும் பணியில் கடந்த பல்லாண்டுக்காலமாக அயராது பாடுபட்டு வரும் விடுதலைப் பாவலர் பெருஞ்சித்திரனாரது தென்மொழி இதழின் செம்மாந்த கொள்கைகளைச் செயற்படுத்தும் மாநாடு, பண்டைப் பாண்டியரின் தண்டமிழ்க் கழகம் பீடுற விளங்கிய கூடன் மாநகரில் தி. பி. 2004, விடை 27, 28 (9, 10 சூன் 73) காரி, ஞாயிறு * ஆகிய நாட்களில் சிறப்புற நிகழ விருக்கின்றது.

முதல் நாள் குமுகாய மாநாடாகவும் மறுநாள் விடுதலை மாநாடாகவும் நடைபெறவிருக்கும் இப் பெருமாநாட்டில் ஊர்வலம், உரைப்பொழிவு, பாட்டரங்கம், மாணவர் அரங்கம், கலை நிகழ்ச்சி, நாடகம் முதலிய பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

தமிழ்நாட்டின் அகத்தும் புறத்தும் உள்ள பல்துறை அறிஞர் பெருமக்களும் ஆற்றல்சால் மறவர்களும் கலந்துகொள்ளும் இம் மாநாட்டில் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அன்பர்கள் நண்பர்களுடன் கலந்துகொண்டு முன்னணியில் நின்று சிறப்புற இன்னே அணியமாகுங்கள்! தமிழ்நாட்டை விடுவிக்கப் போர்முரசு முழங்கும் இம் மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புறுங்கள்.

வரவேற்புக் குழுத் தலைவர்:
க. வெ. நெடுஞ்சேரலாதன்
பொருளாளர்:
க. தென்னவன்

மாநாட்டுச் செயலாளர்.
உ. அரசுமணி
துணைச்செயலாளர்.
சு. ம. முருகுவேந்தன்

செயற்குழு உறுப்பினர்கள். கி. மாவேந்தன், அ. தமிழன்பன், ப. முருகவேள், ஓடை, தமிழ்ச்செல்வன், பெ. திருவேங்கடம்

மாநாட்டு அலுவலகம்
44, அளவுக்காரத் தெரு மதுரை-625001.

பி.கு: மாநாட்டு அறிக்கைகளும் நன்கொடைப் பற்று முறிகளும் தேவையானோர் மாநாட்டு அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். இவ்வகையில் செயலாற்ற விரும்புவோர் செயற்குழுவின் முன்னிசைவு பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மாநாட்டுத் தொடர்பான கருத்துரைகள் வரவேற்கப் பெறுகின்றன. கருத்துரைகள் செயலாளர்க்கே விடுக்கப் பெறுவதுடன் தென்மொழிக்கும் ஒரு படி அனுப்புக.

---

* சென்ற தென்மொழி இதழில் அறிவித்திருந்த நாட்கள் மாற்றப் பெற்றிருப்பதைக் கவனிக்கவும். இங்குக் குறிப்பிட்டுள்ள பக்கல்களே உறுதியானவை.

சமசுகிருதப் பிணந்தூக்க
இதோ இன்னோர் ஆள்...!

க. தமிழமல்லன்.

"மெய்ப்பொருளறிவையும் கடவுள்நெறி இலக்கியத்தையும், தமிழ்மொழி சமசுகிருத மொழியிலிருந்தேதான் பெற்றது. அத்தகைய உயிர்ப்பு சமசுகிருத மொழியிலிருந்தேதான் தமிழுக்குக்கிடைத்தது. சமசுகிருதப் படிப்பே இந்தியப் பண்பாட்டினைப் புரிந்து கொள்ளப் பயன்படும். சமசுகிருத மொழியே இந்திய ஒருமைப்பாட்டுக்கு அரசியல் நிலைகளைவிடப் பெரிதும் உதவும்"

இப்படிப்பேசியவர் வடமொழிப் பிணத்துக்கு மணப்புகையூட்டும் ஆளுநர்களோ, கேதார் பாண்டேக்களோ, நரசிம்மராவுகளோ அல்லர். "தமிழர் தலைவர்" "சிலம்புச்செல்வர்" ம. பொ. சி. யேதான்.

எங்கே பேசினார்? பைந்தமிழ் மேடையிலன்று; பாரதீய வித்தியாபவனத்தில்! பேச்சாளராக இல்லை; சமசுகிருதத் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழாவில்—தலைவராக. சான்று: 19—11—72 அன்று வெளிவந்த "இந்திய விரைவு" நாளிதழ். (Indian Express)

தமிழ்க்கெனப் பிறந்து, தமிழ்க்கெனப் பயின்று, தமிழ்க்கென ஆய்ந்து, தமிழ்க்கென வாழ்கின்ற நம்மவர்கள் அல்லும் பகலும் மண்டையைக் குடைந்து கொண்டு அக்கறையோடு தொடர்ந்து நம் மொழியை ஆராய்கின்றார்களே எற்றுக்கு? "தமிழர் தலைவர்" ம.பொ. சி. யின் ஆராய்ச்சியே "போதுமானது".

மொழியியல் ஞாயிறு, பாவாணர் தம் அரும்பெரும் ஆராய்ச்சிகளை அறிந்திருந்த எனக்கு நெஞ்சு கொதித்தது. வடமொழிப் பிணத்துக்குச் "சுப்பிரபாதம்" பாடி மக்கள் வரிப்பணத்தைப் பாழடிக்கின்ற நிலையைக் கண்டு மனங் கவல்கின்ற எனக்கு இப்படி நம்மவரே பேசுகின்றாரே என்ற எரிச்சல். இப்படி எரிச்சல்படுகின்ற வேளையிலே-தான், நல்வாய்ப்பாக நம் ம. பொ. சி. அவர்கள் புதுச்சேரியில் சிலை 3-ஆம் நாள் (17—12—72) நடந்த பாரதி விழாவுக்கு வந்தார்.

விழாவில் பேசியபின் 1-15-மணிக்குப் பிறகு ம. பொ. சி. தங்கும் வீட்டிற்குச் சென்று கேளுங்கள் என்ற மேடையிலிருந்த 'தமிழச் சங்கத்' தலைவர் கருத்துக் கேற்ப, நான் தனியனுகவே சென்று ம. பொ. சி. அவர்களை நேரில் கேட்டேன். (உடன் வருவதாகக் கூறிய நண்பர்கள் அப்போதுதான் வேலையிருக்கிறது என்று சொல்லி விட்டு 1-10-க்கே போய்விட்டனர்)

மா. பொ. சி. உணவுண்டுவிட்டுப் பூஞ்சேக்கையில் அமர்ந் திருந்தார். அருகில் சென்று பணிவுடன் (அகவை மூதிர்ந்தவர் என்ப தால்) வணக்கம் கூறியபின் உசாவினேன். "தாங்கள் பாரதீய வித்தியாபவனத்தில் பேசியிருக்கின்றீர்களே!" என்றேன். "ஆமாம், அதற்கென்ன" என்ருர். "சமற்கிருதத்திலிருந்துதான் தமிழ் மெய்ப் பொருளறிவையும் கடவுள் நெறி இலக்கியத்தையும் பெற்றது என்று பேசியிருக்கின்றீர்கள். நீங்கள் உண்மைக்கு மாருகப் பேசமாட்டீர்கள். நீங்கள் பேசியதைத் திரித்துப் போட்டுவிட்டார்களா? அல்லது தாங்கள் பேசியது உண்மைதாஞ?" என்று கேட்டேன்.

"ஆ! ஆ! நீ துவேஷத்தை வளர்க்கிற. உன் துவேஷத் துக்கு என்னை ஏன் இழுக்கிற? உனக்குத் 'தத்துவம்,' தெரியுமா? தெரியாம என்னை ஏன் கேக்கற?" என்று சீறினுர். அதோடு நில்லாமல், மேலும் அவர், "நான் பேசினேன்-தான். அதுதான் உண்மை. சமசுகிருதம் இல்லையென்ருல் தமிழுக்குத் தத்துவமேயில்லை. சமசுகிருதத்திலிருந்து பல சொற்களைத் தொல்காப்பியர் கூறியபடி நம்மியல்பாக்கிக் கொண்டு ஏற்றுக் கொண்டுள்ளோம். தத்துவத்தைப் பொறுத்த வரைக்கும் தமிழ் சமசுகிருதத்திலிருந்துதான் பெற்றது" என்ருர். தமிழ்ச்சங்கத் தலைவரும் இன்னுெரு பெரிய வரும் அருகிருந்து அவருக்குத் தலையாட்டினர். நான் விடவில்லை. "தமிழ்தான் உலகின் முதன்மொழி; தமிழன் தான் உலக முதல் மாந்தன்; தமிழன் குமரிக் கண்டத்தில் தோன்றியவன்; என்று பல சான்று களுடன் ஆராய்ச்சிகள் அறைகின்றனவே, எப்படி ஐயா, பின்னர்ப் பிறந்த, அரைகுறை மொழியான சமற்கிருதம் செம்மொழியான தமிழுக்கு மெய்ப்பொருளறிவை வழங்கியிருக்க முடியும்?" என்று அவரிடம் மீண்டும் கேட்டேன். நான் சொல்லுவதைச் செவியில் ஏற்காமலேயே அவர்களைப் பார்த்துக் கொண்டே ம. பொ. சி. பேசினுர்:

'புஸ்த்தக்' என்றசொல் சமசுகிருதச்சொல். நம் வடிவுக்கு ஏற்றவாறு புத்தகம் என்கிறோம். அதைப் போலவே சமசுகிருதத்திலிருந்து "த த் து வ" த் தை த ப் பெற்றோம் என்றார். 'புத்தகம் என்பது தூய தமிழ்ச்சொல்' என்று நான் மறித்துச் சொன்னேன். அதையும் பொருட்படுத்தாமல் அவர் மீண்டும்பேசினார் அவர்களைப் பார்த்துக் கொண்டே. இந்நிலையிலும் அடுத்ததாகக் கேட்டேன். "சமற்கிருதம் இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்கும் என்று நீங்களே பேசுகின்றீர்களே அஃது எப்படிச் சரியாகும்?" (முதலிலிருந்தே நான் கொச்சையாகப் பேசவில்லை).

" நீ கேக்கற முறை சரியில்லே. கேக்கறதுக்கு ஒருமுறையுண்டு. நீ பாட்டுக்கு எப்படியோ கேக்கறியே என்றார். (நான் நின்றுகொண்டு தான் உட்கார்ந்திருப்பவரிடம் குனிந்துதான் பேசுகிறேன். இதை விடப் பணிவு-முறை-என்றால் மண்டியிட்டுத் தண்டனிட்டுத்தான் கேட்க வேண்டும் போலும்!) அதற்கும் அவர் விடை கூறவில்லை. "இந்தக்காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான்" என்று ஒரு தோழரைச் சுட்டிச் சொன்னார். இப்படியே வழவழா கொழ கொழாவாக்கித் தன் அயல் நாட்டுப் போக்கு வரவுப் பெருமையை விளம்பிக் கொண்டிருந்தார். எனக்கு இரக்கமே ஏற்பட்டது.

"13—11—72 அன்று வந்த ஒரு செய்தியின்படி சமற்கிருத மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தியாவில் 2212 பெயரினரே. 2212 பெயரினருக்கே உரிய தாய்மொழியான (?) மொழி எப்படி 5.7 கோடி மக்கள் வாழும் இந்தியாவின் ஒருமைப்பாட்டை வளர்க்கும்" என்று கேட்கவே துடித்தேன். என்னைப் பேசுவதற்கேவிட வில்லை. 'அவங்க பெரியவங்க; அவங்க பெரியவங்க' என்று கூறியே, தலையாட்டியே தடுத்துவிட்டனர் அருகிருந்த எங்கள் ஊர்க்காரர்கள். இந்த வினாவிற்கு அவரால் விடை கூறவே முடியாது. தாம் பேசியது தவறு என்று ஒப்புக் கொண்டிருக்க வேண்டியதைவிட வேறு வழியே இல்லை.

"தமிழர் தலைவரை," "சிலம்புச் செல்வரை" அணுகி அவரது பண்பாட்டு மாண்பினை அறிந்து கொண்டு சிரித்தேன். இரக்கப்பட்டேன், தமிழக்கூட்டத்தை எண்ணி. வீறுகொண்டேன் தமிழ் மறக்கூட்டத்தை நம்பி! நம் தென்மொழி மறவர்கள் ம. பொ. சி. யின் கூற்றுப் பற்றி யறிய வேண்டும். தனி முடிவுகளை இனி மேற்கொள்ள வேண்டும், என விழைகிறேன். O

தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே!

அதில் ஐயத்திற் கிடமே இல்லை!

இந்தக் கருத்தை இதுவரை எந்த ஆராய்ச்சியாளரும் நேரிடையாக, தக்க காரணங்காட்டி மறுக்கவில்லை.

தமிழைக் கொண்டுதான் நாம் உயரமுடியும்; ஒற்றுமையாக வாழமுடியும்—அந்த ஒரு கருவிதான் நமக்கு மிஞ்சியிருக்கின்றது!

தன்னை மறந்து, தமிழையும், தமிழரையும் நினையுங்கள்! அப்பொழுதுதான் நாம் முன்னேற முடியும்!

தஞ்சைக் கருத்தரங்கில்
பேராசிரியர் கோ. நிலவழகனார் பேச்சு:

தஞ்சையில் கடந்த திங்கள் (31—12—72) அன்று நடந்த தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கில், பெரும்புலவர் நீ. கந்தசாமி அவர்களின் தலைமையில், சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், கோ. நிலவழகனார் க. மு. அவர்கள் ஆற்றிய சொற் பொழிவு இது:

தலைவர் அவர்களே! ஐயா பாவாணர் அவர்களே! தொழில் துறையிலே புதுமைகளைப் படைக்கின்ற அறிவியலறிஞர் அவர்களே! பெருஞ்சித்திரனார் அவர்களே! பேராசிரியர்களே! தமிழன்பர்களே! எல்லாருக்கும் வணக்கம்.

இம்மாநாடு கூட்டப்பெற்றிருப்பதன் முகாமையான நோக்கம் என்ன என்பதைத் தொடக்கத்திலேயே சொல்லிவிட்டார்கள். என் போக்கிலே சில கருத்துகளை நான் தொகுத்து வைத்திருக்கின்றேன். மறுப்பு இதுவரையிலே அந்தக் கருத்துகளுக்குச் சொல்லப்பட வில்லை என்ற துணிவோடு, அவற்றை இந்த மன்றத்திலே அடுத் தடுத்து வரிசைப் படுத்திச் சொல்லுகின்றேன். அந்தக் கருத்துக்



களுக்கு மாறுபாடு உண்டானால், உறுதியாக விடையளிக்க வேண்டும் மற்றவர்கள்; (அவர்கள்) எங்கே இருந்தாலும் சரி. அளிக்க இயலாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த வகையிலே, கருத்துகளைத் தொகுத்துச் சொல்கின்றேன்; வரலாற்றையும் அறிந்தவன் என்ற அந்த எண்ணத்தோடு. ஆனால் தருக்கோடு அன்று. வரிசைப் படுத்தியே சொல்லுகின்றேன். எவரும் மறுக்கவில்லை என்ற துணிவோடு.

தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கும் பலர் தமிழ் என்று சொல்லிவிட்டாலோ, தமிழ் இனம் என்று சொல்லிவிட்டாலோ பொறுத்துக் கொள்ள முடியாமல் தொல்லைப்படுகின்றார்கள் நம் மிடையே பலர் (அவ்வாறு உளர்). நான் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. வேற்று மொழியை அறியாத நிலையிலும் கூட வடமொழியை-எழுத்தையும் அறியார்; இலக்கியத்தையும் அறியார். என்றாலும் அந்த மொழியிலே பற்றுக் கொண்டு அந்த மொழியை வாழ வைக்க முடியும் என்னும் நம்பிக்கையோடு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்களே, அவர்களுக்கு இந்த மாநாட்டின் வழியாக விடப்படுகின்ற அறைகூவல் இது (சவால் என்றால் தெளிவாக இருக்குமென்று சொல்கின்றேன்). அதை ஏற்று அவர்கள் விடையளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. பெரும்பாலும் சொல்லப்படுகின்ற கருத்துகளை காது கொடுத்துக் கேட்காதவர்கள் போலவே நடந்து கொள்வது அவர்களுடைய பழக்கம். ஆகவே நாம் அதுபற்றிக் கவலைப் படுவதற்கில்லை.

மொழியும் அறியாமல், எழுதவும் தெரியாமல், படிக்கவும் செய்யாமல் இருக்கின்றவர்கள் கொண்டிருக்கின்ற முழுப்பற்றிலே பத்திலே ஒன்று-கூடுதலாகச் சொல்ல வேண்டுமானால் நூற்றிலே ஒன்று விழுக்காடுகூட நமக்கில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம்மிடத்திலே இருக்கின்ற குறைகளை நாம் என்றைக்கு உணருகின்

ரேமோ அன்றைக்குத்தான் நாம் முன்னேற முடியும். அந்த அடிப் படையிலே இந்தக் கருத்தைச் சொல்லுகின்றேன், வேறு வகையிலே அன்று; அருள்கூர்ந்து தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

நம்மைக் கண்டேனும் அவர்கள் அச்சப்பட்டு, வடமொழியைப் படிக்கின்றார்களா, படித்துத் தெளிவு பெற்ற பிறகு தமிழைப்பற்றிக் குறைபடப் பேசுகின்றார்களா, அல்லது வடமொழியின் செல் வாக்கைப்பற்றிப் பேசுகின்றார்களா என்றால், இல்லவே இல்லை. இன்று வரையிலே இல்லை. 1961-இன் மக்கள் கணக்கீட்டின்படி இந்தியா முழுவதிலுமாகச் சேர்ந்து வடமொழியைப் பேசவும் எழுத வும் தெரிந்தவர்கள் 500 பேர் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள். அதாவது பத்து இலக்கத்திற்கு ஒருவர் வடமொழி வழியாகப் பேசவும் எழுதவும் செய்ய வல்லவர் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள். இங்கே எனக்கிட்டிருக்கின்ற கட்டளை குமரி நாடு தமிழன் பிறந்தகம் என்பது பற்றிச் செல்ல வேண்டும் என்பதுதான். அதற்கு முன்னால் இது தேவைப்படுகின்றது என்பதற்காக இதைக் குறிப்பிடவிரும்புகின்றேன். அவர்கள் முடிவுகட்டிக் கொண்டே தமிழைப் பற்றியும் தமிழினத்தைப் பற்றியும், நேரிடையாகவும், மறைமுகமாகவும் எழுதிக் கொண்டுதான் வருகின்றார்கள். அந்தமொழி செத்தமொழி என்று சொல்லிவிட்டால் அவர்களுக்கு அளவுக்கு மீறிச் சினம் வருகின்றது. கிரேக்கமொழி மறைந்த மொழி என்று சொன்னால் சினம் வருவதில்லை மேலை நாட்டார்க்கு;(அவர்கள்) அறிவுள்ளவர்கள், ஆகையினாலே! இலத்தீன் மொழி அப்படித்தான் என்று சொன்னால் அவர்கள் மறுப்பதில்லை; அவர்கள் அறிவுள்ளவர்கள் ஆகையினாலே! இங்கே உள்ளவர் களுக்குச் செத்தமொழி என்று சொல்லிவிட்டால் சங்கராச்சாரியார் முதலாகக் கடைசி ஆள்வரையிலே சினம் வருகின்றது. மொழி வழி யாக எழுதத் தெரியாது; எழுத்தும் அவர்களுக்குத் தெரியாது. இலக்கிய மணத்தை யறியாதவர்கள். என்றாலும் கூட அந்த மொழியை வைத்துக் கொண்டு தமிழரை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையோடு பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்குங் கூட அரசியலிலே இரட்டைப் புணைவு அவர்களுக்கு உண்டு. ஒரே ஆள் இரண்டு தாள்களை அல்லது இதழ்களை நடத்தினால் ஒன்றில் அரசைத் தாங்குவார்; அவர் கீழே துணையாக இருப்பவர் அதை மறுப்பார். நாளைக்கு எந்தக் கை ஓங்குகின்றதோ அந்த வழியை அவர்கள் பின் பற்ற முடியும். அந்த வழியிலே அவர்கள் செல்ல முடியும். இரட்டைக் குழல் (துமுக்கி) என்பார்களே, அந்த நிலையிலே அவர்களின் இதழ்கள், செய்தித்தாள்கள் இருப்பதை நாம் பார்க்கலாம். எனவே விழிப்பாக இருக்க வேண்டும். என்றைக்குமே அவர்கள் வாழத் தெரிந்

தவர்கள். எப்படியும் வாழலாம் என்ற நோக்க முள்ளவர்கள். இப்படியும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள், இந்த நாட்டிலே. தொகையிலே மிகக் குறைந்தவர்கள். ஆனால், விழிப்புணர்ச்சியோடு இருக்கின்ற காரணியத்தினால் நம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கின்ற அளவுக்கு அவர்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

வரலாற்றுத் துறையிலே பெயர் பெற்றவராக விளங்கியவர் நீலகண்ட சாத்திரியார். இன்றைக்கு ஓய்வுபெற்று அடையாற்றிலே இருக்கின்றார். வருவார் என்று எதிர்பார்த்தோம். அழை கூவல் விடுத்தோம். வரமாட்டார் என்பது நமக்குத் தெரியும். தப்பித் தவறி அந்த (பார்ப்பன) இனத்திலே ஒரு மூன்று நான்கு பேர் பிறந்து விட்டார்கள், தமிழ் அன்போடு, தமிழ்ப்பற்றோடு, தமிழ் நாட்டுச் சோற்றை உண்ணுகின்றோமே இரண்டகம் செய்யக் கூடாதே என்று வாழ்ந்தவர்கள் சிலர். பி. டி. சீனுவாச ஐயங்கார் அவர்களில் ஒருவர். வரலாற்றுத்துறையிலே நானும் பாடங்கேட்கின்ற பேற்றை எனக்களித்த வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் அவர்களில் ஒருவர். 'திரவிடியன் இண்டியா' என்ற நூலை எழுதிய சேச அய்யங்கார்– இப்படிச் சிலர் உளர். இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே வளர்ந்து இந்த உப்பைத் தின்பதற்காக நாம் தவறு செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு, உணர்ச்சியோடு வாழ்ந்தவர்கள். தமிழின் பெருமையை தமிழினத்தின் சிறப்பை எடுத்துச் சொன்னவர்கள். அவர்கள் நீங்கலாக எஞ்சியிருக்கின்றவர்கள் எல்லாருமே எழுத்தையும் அறியாதவர்கள்; தமிழையும் விளங்கிக் கொள்ளாதவர்கள். தமிழையும் தமிழினத்தையும் குறைப்படுத்திப் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டுந்தாம் வருகின்றார்கள். நம்மிடத்திலே மறுத்துச் சொல்வதற்குத் தக்கவர்கள் இல்லை. சொல்லவேண்டும் என்ற எண்ணம் வருமானால், நாம் சொல்லிவிட்டால் நாம் வாழுகின்ற இடத்தில் நமக்கு மேலே இருக்கின்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற அச்சம்–என்னை–முதலாக வைத்து வாட்டுகின்றது. எல்லாருக்கும் உண்டு இந்த அச்சம். தன்னை முதலிலே காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றுதான் தமிழன் விரும்புகின்றான். தன்னை எப்பொழுது மறக்கின்றானோ, தமிழை எப்பொழுது நினைக்கின்றானோ அன்றைக்குத் தான் தமிழன் உயர முடியும்.

இஃது அவ்வளவு எளிதான செயல் அன்று. செயல் படுத்தும் பொழுது பெருந்தொல்லையாக வந்து முடிகின்றது. அந்தத்தொல்லையினாலே பெரும் அளவுக்கு இடையூறு பெற்றவன் நான். என்றாலும் கவலையில்லாமல் அதில் ஈடுபாடு கொண்டிருக்கின்றேன்.

பாவாணரைப் போன்றவர்கள், மறைமலையடிகளாரைப் போன்றவர்கள் எல்லாரும் வாழ்க்கையையேகொடுத்து விட்டிருக்கும் பொழுது, நம்மாலே முடிந்த அளவுக்கு நாம் செய்யலாம், ஈடுபடலாம் விழிப் புணர்ச்சியை ஊட்டலாம் என்பதற்காகத்தான் நான் இதுபோன்ற மாநாடுகளிலே கலந்து கொள்ளுகின்றேன்; இதுவும் என்னை ஓரளவு தாக்கவே செய்யும் என்றாலும் கூட. அந்த விழிப்புணர்ச்சி அவர்களுக்கு இருக்கின்றது. இன்றைக்கும் ஆரியர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்? எத்தனையோ கலப்புகள் ஏற்பட்டுவிட்டன. எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகக் கலந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இன்றைக்கு, தமிழர்கள் எனத் தனிப் படுத்திச் சொல்லிக் கொள்ள வேண்டுமென்றால், மொழிப்பற்றுக் கரணியமாக, நாட்டுப்பற்றுக் கரணியமாக, இனநலம் கரணியமாகத்தான் தமிழர்களைப் பிரித்துச் சொல்ல முடியும்; சொல்ல வேண்டும். அவர்களுக்கிடையேயும் சிலர் தமிழர்களாக உளர். நம்மிடையேயும் சில வையா புரிகளும் உளர். இதை எண்ணி விழிப்புணர்ச்சியோடு நாம் என்றைக்கு நடந்து கொள்கின்றோமோ அன்றைக்குத்தான் நாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சிறிது சிறிதாக முன்னேற முடியும். இந்த எண்ணங்களை அடிப்படையாக மனத்திலே கொள்ளுமாறு வேண்டிக் கொண்டு, கருத்துக்கு வருகின்றேன்.

அண்மையிலே ஒரு நூல் எழுதப் பெற்றிருக்கின்றது. வரலாற்றுப் பேராசிரியர் பர். சுப்பிரமணியம் என்பவராலே எழுதப் பெற்றிருப்பது. வரலாற்றுத்துறையிலே மதுரைப் பல்கலைக் கழகத்திலே அவர் பேராசிரியராக விருக்கின்றார். ‘தமிழர்கள் ஒரு கலப்பட இனத்தைச் சார்ந்தவர்கள்; கலப்பட இனம் தமிழினம்’ என்று குறித்திருக்கின்றார். தமிழர்களுக்கென்று சைவ வழிபாடு; சிவன் பழமையான இறை; தெய்வம் என்று சொல்லிக் கொள்கின்றார்கள். எப்படி அதை உலகம் ஏற்றுக் கொள்ள முடியும்?'' என்று கேட்டு மறுத்திருக்கின்றார். “தமிழர்களுக்குத் திராவிடர்கள் என்று பெயருண்டு என்பதை உலகம் ஒப்புக் கொள்ளுமானால் அந்தத் திராவிடர்கள் நடுத்தரைக் கடல் பகுதியிலிருந்து இங்கு வந்து சேர்ந்தவர்கள்; பல ஆண்டுகளுக்கு முன்னாலே; அவர்கள் இந்த நாட்டுக்கே உரியவர்களல்லர்'' என்று மறுத்திருக்கின்றார். இப்படிப் பல கருத்துகளைத் தொகுத்துக்கூறும் அந்த நூல் வெளியாகி ஒரு கிழமை கூட ஆகவில்லை. நீலகண்ட சாத்திரியாருக்குத் தம்பிபோலத் தம்மை எண்ணிக் கொண்டு அவர் எழுதியிருக்கின்றார். நாம் இங்கே நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது, ஒன்பது பேர் சொன்ன கருத்துகளை. நான் ஐந்து வரிகளிலேயே சுருக்கிச் சொல்கின்றேன்

நேரம் இன்மை எனும் கரணியத்தால். இந்தக் கருத்துகள் எவராலும் மறுக்கப் படவில்லை. ஆகவே, இன்றைக்குச் செய்யப் படுகின்ற முடிவுகள் வரலாற்று முடிவுகள். உலகம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய முடிவுகள். உலகம் ஏற்றுக் கொள்ளும் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு.

சமயத்துறையிலே அமெரிக்கா வரையிலே சென்று, இந்தியாவின் புகழைப் பரப்பிவிட்டு வந்தவர் விவேகானந்தர். அவர் 1921 இல் ஒரு கருத்தைச் சொன்னார். இந்தியாவிலே பழம் பெரும் பகுதியாக விளங்குவது தமிழ்நாடு. இந்தத் தமிழ் நாட்டினின்றும் நெடுங்காலமாக வாழ்ந்து வந்த மக்களிலே சிலர் சில குழுக்களாகப் பிரிந்து, எகிப்து போன்ற பகுதிகளுக்கு, பாபிலோனியா போன்ற பகுதிகளுக் கெல்லாம் குடியேறினார்கள் என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார். இதுவரையிலே எந்த ஒருவரும் மறுக்கவில்லை. பிரபுத்த பாரதா என்ற ஆங்கில இதழ் கல்கத்தாவிலிருந்து வெளியிடப்பெற்றது (1921). அதில் அவர் "தமிழினத்தின் தொன்மைக்கு இணையாக உலகத்திலே எந்த இனத்தின் தொன்மையினையும் சொல்ல முடியாது. தமிழர்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை அறிவுக்கிணையாக மற்ற எந்த இனத்தின் அறிவையும் சொல்ல முடியாது. ஆகத் தொன்மை உண்டு என்றால் தமிழினத்திற்கு உண்டு; தமிழ்மொழிக்கு உண்டு" என்று சொல்லிச் சென்றார். அந்தக் கருத்து இன்று வரையிலும் மறுக்கப் படவில்லை. பர். மெக்கலின் என்பவர் ஆங்கிலேயர். சென்னையில் இருந்தவர். 1930-இல் ஒரு நூலை வெளியிட்டார். MANUAL OF ADMINISTRATION OF THE MADRAS PRESIDENCY "சென்னை மாநிலத்தின் அரசியல் நிலைமை" (அரசியல் போக்குப் பற்றிய கருத்துகளைத் தொகுத்துச் சொல்கிற நூல்) அந்த நூலிலே "தமிழ் நாடுதான் உலகத்திலே மாந்த இனமே தோன்றி வளர்ந்து வளம் பெறுவதற்கெல்லாம் நிலைக்களனாக இருந்த இடம்' என்று சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தும் இதுவரையில் தக்க கரணியங் காட்டி எவராலும் மறுக்கப்படவில்லை. 1947 இலே 'ORIGIN AND SPREAD OF THE TAMILS' "தமிழர் உலகமெலாம் பரவியவர்கள் அவர்கள் தோற்றம்" என்ற தலைப்பிட்டு ஓர் ஆங்கில நூலை வரலாற்றுத் துறையில் விளங்கிய பேராசிரியர் இராமச்சந்திரதீட்சதர் அவர்கள் வெளியிட்டு அதிலே சில கருத்துகளைச் சொன்னார்கள். DRAVIDIAN HOME OR TAMILIAN HOME - ORIGINAL HOME - WAS SUBMERGED IN THE CONTINENT என்று குறித்திருக்கின்றார்கள். "மறைந்து

போன கண்டத்திலே தமிழனுடைய முதாதையர்கள் வாழ்ந்தார்கள். அந்த மறைந்துபோன பகுதியினுடைய எஞ்சிய பகுதி இன்றைய தமிழ்நாடு என்று சொல்லியிருக்கின்றார்கள். இதுவரை எவரும் கரணியங் காட்டி அந்தக் கருத்தையும் மறுக்கவில்லை. 1949இல் ஆங்கிலேயர் எசரன் எல் என்பவர், "சென்னை பழம்பெரும் நாடு. மாந்தன் தோன்றி வளர்ந்து, அறிவு பெற்றுப் பல இடங்களுக்கும் செல்வதற்கு நிலைக்களமாக, இருப்பிடமாக அமைந்த நாடு சென்னையே (சென்னையில் வாழ்ந்ததால் சென்னையைச் சொல்லியிருந்தாலும் தமிழ்நாட்டை மனத்தில் கொண்டே சொல்லியிருக்கின்றார்) என்று சொல்லியிருக்கின்றார். Madras is the birth place of a long enduring and wide spread civilization in the earliest history of mankind என்று சொல்லியிருக்கின்றார். இதுவும் மறுக்கப்படவில்லை. ஏறக்குறைய 20 மொழிகளிலே வல்லவராக வாழ்ந்து, பம்பாயிலிருந்து தம்முடைய ஆராய்ச்சி யெல்லாம் செய்து அரிய கருத்துகளைச் சொன்ன தந்தை ஈராசு அவர்கள் கருத்தையும் இதுவரை மறுக்கவில்லை. அவருடைய நூல் 1953-இலே வெளியிடப் பெற்றது. Studies in Proto Indo mediterranean culture-'இந்திய நடுத்தரைக் கடல் மக்கள் பண்பாடு' என்று எழுதியிருக்கின்றார்கள். அதில் அவர்கள் சொல்லுகின்ற கருத்து, "தமிழர்கள் திராவிடர்கள் என்று சொல்லப் பெறுகின்றார்கள். தமிழர்கள் இந்தியா முழுவதும் இன்றிலிருந்து ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் (அஃதாவது 1972ஐ 2000 என்று கொள்ளலாம்.) கிறித்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியா முழுவதும் வாழ்ந்த இனம் தமிழினம்; இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழி தமிழ்மொழி" என்று எழுதியிருக்கின்றார்கள். இதுவரையிலே ஆராய்ச்சித்துறையிலே தங்களையெல்லாம் வல்லவர்களாகக் கருதிக் கொள்ளும் ஐராவதம் மகாதேவன் போன்றவர்கள் [இதையெல்லாம் குறிப்பதற்காக மன்னிக்க வேண்டும்] மறுத்துச் சொல்ல முடியவில்லை தக்க கரணியம் காட்டி. தந்தை ஈராசு சொல்லி விட்டார். சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, என்று இப்படி மறுக்கின்றார்களே தவிர, கரணியங்காட்டித் தெளிவான முறையிலே விளக்கம் சொல்வதில்லை. "அவர் சொன்னால் சொல்லட்டும். நான் இப்படிச் சொல்லுகின்றேன்" என்று சொல்லுகிறார்கள், அவர்கள் போக்கிலே. அவருடைய [தந்தை ஈராசு] கருத்து இதுதான்: 'திராவிடம் என்ற பெயரிலே தமிழினம் இங்கிலாந்து வரையிலே சென்றிருக்கின்றது. தமிழினத்திலே ஒரு பிரிவு அதுவரையில் சென்றிருக்கிறது. அப்படிச் சென்ற பிரிவுக்கு'ட்ரூயிசு' என்று முன்னாலே பெயர் வைத்தார்கள்; திராவிடம் என்பதன் மரூஉ அல்லது சிதைவுதான் ட்ரூயிசு

என்பது'' என்று அவர் குறித்திருக்கின்றார். அதுவும் இதுவரை மறுக்கப் பெறவில்லை. விவேகானந்தர், பாபிலோனியா எகிப்து போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்ற இனம் தமிழினம் என்று சொன்னார். ஈராசு அவர்கள் இங்கிலாந்து வரையிலே சென்ற இனம் அந்த இனம் என்று சொன்னார். அந்தக் கருத்துகள் இது வரையிலும் மறுக்கப் பெறவில்லை.

அதற்கடுத்து, கேரளத்தைச் சார்ந்தவர், பாதிரியர் டேனிவல் என்பவர். தமிழ்வழி தோன்றிய தாரகம் என்றே தலைப்பிட்டு ஒரு நூலை எழுதியிருக்கின்றார்; தமிழ்தான் எல்லாவற்றுக்கும் அடிப் படை என்ற கருத்திலே. ''எபிரேயர் தமிழகத்தினின்று சென்ற காலம் ஏறத்தாழ கி. மு. மூவாயிரமாக இருக்கவேண்டும். மிசன்னி, பிராகிருதி, காகேசியன், செராமிய மொழிகளெல்லாம் தமிழின் வழிவந்த மொழிகள் என்று கால்டுவெல் குறிப்பிடுகின்றார்; ஏற்புடைய கருத்து'' என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தும் மறுக்கப்பெறவில்லை. 1969-இல் பழந்தமிழ் நாடு சிதைந்துபோன எந்த நாட்டோடு அல்லது நிலத்தோடு தொடர்பு கொண்டிருந்தது என்பதை, நல்ல முறையிலே தெளிவாக விளக்கிப் படமெல்லாம் வரைந்து காட்டியவர், சான் எர்ட்டன் என்ற அமெரிக்கப் பேரா சிரியர். அவர் ''உலகத்திலே இருக்கின்ற மக்களிலே பெரும்பாலானோர் மறைந்து விட்ட காண்டுவானாலேண்டு என்னும் நிலப்பகுதியி லிருந்து வந்தவர்கள்தாம் என்று குறிக்கின்றார். (ஆங்கிலத்திலே ஒவ்வொரு முறையிலே ஒவ்வொரு பெயரைக் கொடுத்திருக்கின்றார்கள். தமிழ்ப் புலவர்கள் குமரிக்கண்டம் என்றதைத்தான் உயிர்நூல் ஆராய்ச்சியாளர்கள் இலெமூரியா என்று குறித்தார்கள்; குரங்கினத் தினின்று மாந்தன் வந்தவன் என்பதற்காக. நில நூல் ஆராய்ச்சி யாளர்கள் காண்டுவானாலேண்டு என்று குறிப்பார்கள். ஆக, குமரிக்கண்டம் ஒன்றுதான்; இலெமூரியா என்பதும் ஒன்று தான்; காண்டுவானாலேண்டு என்பதும் அதுதான். அவரவர்கள் அவரவர்கள் கண்ணோட்டத்திலே ஆராய்ச்சி யடிப்படையிலே அவ்வப் பெயர்களை அமைத்தார்களே யொழிய குறிக்கப்படுகின்ற நிலப்பகுதி ஒன்றுதான் என்பதைத் தெளிவாக நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும்.) அவர்கள் (சான் எர்ட்டன்) குறிக்கின்றார் ''In conclusion it is interesting to note that we ourselves one of Gondwana-land, island continent''. அவர் தங்களையும் சேர்த்துக் கொண்டு, அஃதாவது அமெரிக்கர், ஆங்கிலேயர் எல்லாரையும் சேர்த்துச்

சொல்கின்றார், "மறைந்துபோன அந்தக் கண்டத்திலிருந்து வந்தவர்கள் தாம், இன்றைக்கு உலகத்தில் வாழுகின்றவர்கள்" என்று. இதை 1969–இலேயே சொன்னார்கள். அந்தக் கருத்தும் இன்று மறுக்கப்படவில்லை.

இசுக்காட் எலியட் என்பவர் முன்பே எழுதினார், ஒரு நூலை 'The Atlantis and the Lost Lemuria' என்னும் ஆங்கில நூல் அது. அந்த நூலை அடிப்படையாகக் கொண்டுதான் திரு. அப்பாத்துரையார் போன்றவர்கள் கூட "குமரிக் கண்டம்; அல்லது கடல் கொண்ட தென்னாடு" என்ற நூலை எழுதியிருக்கின்றார்கள். அந்த நூலிலே சொல்லியிருக்கின்ற கருத்தை இறுதியாகச் சொல்லிக் கொள்ளுகின்றேன். "தெற்கே இருந்த பகுதி–அவர் குறிப்பிடுகின்ற பெயர் காண்டுவானாலாண்டு என்பதுதான்–அதிலே ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா, இந்தியாவினுடைய தென் பகுதி, இந்தப் பகுதிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்திருந்த அந்தப் பெரும் நிலப்பரப்பைப் படம் போட்டுக் காட்டியிருக்கின்றார். இன்னொரு பகுதி லாரேசியா என்ற தலைப்பிலே வடக்கே நடுக்கோட்டிற்குப் பின்னுள்ள பகுதியைக் காட்டி, இந்த இரண்டு பகுதிகளும் நிலக்குலைவு காரணியமாக, எரிமலை அதிர்ச்சி காரணியமாகச் சிதறுண்டு போன காலத்திலே ஒரு பகுதியாக நகர்ந்து வந்த பகுதி தென்னிந்தியப் பகுதி என்ற கருத்தில் சொல்லியிருக்கின்றார். இரண்டாயிரம் கற்கள் வடக்கு நோக்கி நகர்ந்து, இன்றைக்கு இருக்கின்ற பகுதியோடு சேர்ந்து; விந்தியமலைக்கு அப்பாலிருந்த பகுதி பெருங்கடலாக விருந்த பகுதி, அதோடு சேர்ந்து இந்தியாவாக இன்றைக்குக் காட்சியளிக்கின்றது. பல ஆயிரமாண்டுகளுக்கு முன்னாலே தென்னிந்தியா மட்டும்–பழந் தமிழ் நாடு மட்டும்–பெரும் நிலப்பரப்பிலே இருந்த ஒரு பகுதி. அந்த எஞ்சிய பகுதியிலேதான் இன்றைக்கும் வாழுகின்றோம். நம்முடைய தொடக்கம் அங்கேயே உண்டு என்பதை நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

இலண்டன் பொருட்காட்சிச் சாலையிலே ஓர் அரிய நூல், கையேட்டுப் படி ஒன்று உண்டு. அதை அடிப்படையாகக் கொண்டு கடைசியாக ஏற்பட்ட கடல் கோள் 9000 ஆண்டுக்கு முன்னாலே ஏற்பட்டது. அதனாலே பல சிதைவுகள் ஏற்பட்டு, இந்தத் தென்னாடு இன்னும் வடக்கு நோக்கி நகர்ந்தது என்னும் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். இது பல ஆண்டுகட்கு முன்னரேயே சொல்லப்

பெற்ற கருத்து. இதுவும் மறுக்கப் பெறவில்லை. இத்தனைக் கருத்து களையும் சொல்வதற்குக் கரணியம், தெற்கேயிருந்து வந்தவர்கள் தமிழர்கள்; அவர்களுக்குப் பழமை உண்டு; அவர் மொழிக்கும் பழமை உண்டு. இந்தக் கருத்தை-தக்க முறையிலே- கரணியம் காட்டி, நேரிடையாக எவரும் மறுக்கவில்லை. மறைமுகமாக எங்கெங்கோ ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றார்களே தவிர, இது போன்ற இடங்களிலே, மேடையிலே அமர்ந்து, கருத்து மாற்றங்கள் உண்டானால் வேற்றுமைகள் உண்டானால், சொல்லி, பேசித்தீர்த்து முடிவு செய்து கொள்ள வேண்டும். இதுவரையிலே செய்யவில்லை. ஆகவே இந்தப் பேரறிஞர்களாலே குறிக்கப்பெற்ற கருத்துகள் ஏற்புடைய கருத்துகள்; நம்மாலே ஏற்றுக் கொள்ளப் பெறுகின்ற கருத்துகள். உறுதியாக நின்று வாழ வேண்டும்; வாழும்; **தமிழன் பிறந்தகம் குமரிநாடுதான் ஐயத்திற்கிடமே இல்லை. தமிழ்மொழி தொன்மையானதுதான். அதிலும் ஐயத்திற் கிடமே இல்லை. தமிழன் தொன்மையானவன்தான்.**

ஆனால், தமிழர்களாகிய நம்மிடத்திலே இரண்டு குறைபாடுகள் இருக்கின்றன. ஒன்று ஒற்றுமை இல்லை. இரண்டாவது மொழிப் பற்றில்லை. இந்த இரண்டும் இல்லை என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொண்ட ஒரு கூட்டம், எழுத்தும் அறியாத கூட்டம், தமிழைப் படிக்க விரும்பாத கூட்டம், வடமொழியைத் தெரிந்து கொள்ளாத கூட்டம், வடமொழியை வாழ வைக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற போராட்டமே இந்த இரண்டுக்கும் இருக்கின்ற போராட்டந்தான்; வடமொழிக்கும் தமிழுக்கும்! ஐயா (பாவாணர்) அவர்கள் தெளிவாக **வடமொழி வரலாறு** என்ற நூலிலே சொல்லியிருக்கின்றார். விளம்பரத்திற்காக அன்று; விளம்பரம் வேண்டுமென்றால் அவர்கள் எப்பொழுதோ பெற்றிருக்க முடியும்; எந்த நிலைமைக்கும் உயர்ந் திருக்க முடியும்; தமிழுக்காகத் தம்மையே தாழ்த்திக் கொண்டவர்; அந்த (நூலில் உள்ள) கருத்தைச் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. அதைச் சொல்லி முடித்துக் கொள்ளுகின்றேன். 'வடமொழி எழுதப் பெற்ற மொழியன்று; இந்தியாவிலே ஆரியர் நுழைந்த பொழுது ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வந்தவர்கள் இங்கிருந்தவர்களை வென்றார்கள் என்று சொல்வது கழைக்கூத்தாடி வேலைதான். ஒன்று கேட்க வேண்டும் நாம், வென்றவர்கள் யாரும்

இடத்தை விட்டு விட்டு ஓடிப்போவதில்லை. அங்கே இருந்தவர்களை வென்றார்கள் என்று சொல்வது உண்மையானால், அங்கேயே அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருக்க வேண்டும். வென்றுவிட்ட பிறகு ஓடிவந்திருக்கத் தேவையில்லை. ஆகவென்றார்கள் என்பது கட்டுக் கதை. வெல்ல முடியாது.

சொல்ல, நிரம்பக் கருத்துகளுண்டு. வாய்ப்பு இங்கு குறைவு. அவர்கள் ஆட்டிப் படைக்கின்றார்கள். ஆட்டிப் படைக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுகின்ற பொழுதெல்லாம் இனிமையான தமிழிலே பேச வேண்டும். அந்தப் பற்றோடு வாழ்கின்றவர்களுக்கு நம்மாலே முடிந்த அளவு கைகொடுத்து அவர்களை இழுக்க வேண்டும். இந்த நிலைமை இருக்குமானால் உறுதியாக நாம் வளர்ச்சி பெற முடியும். இல்லையென்றால் கோயிலிலே கூட அது தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற சங்கராச்சாரியார் முதலாக வடமொழியைத்தான் போற்றுவார்கள்.

இங்கே வந்தபிறகு இந்த நாட்டிலே எழுத்து எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்ட கூட்டம் அந்தக் கூட்டம். இந்து ஐரோப்பிய மொழிகளிலே கூட்டு எழுத்துகள் மிக மிகக் குறைவு. பத்துப் பன்னிரண்டுக்கு மேலே யில்லை. வடமொழியிலே கூட்டு எழுத்துகள் தமிழக் கூட்டு எழுத்துகளின் தொகையைவிட மிஞ்சிவிட்டது. அதை நல்லமுறையிலே கரணியங்காட்டி விளக்கியிருக்கின்றார் பாவாணர் அவர்கள். எழுத்தையே இங்கே வந்து படைத்துக் கொண்டு, தமிழையே அடிப்படையாக வைத்துத்தமிழையே அழிக்கப் பார்க்கின்றார்கள் என்று. தேள் கருவுற்று வெளியிலே குஞ்சுகள் வருமானால் பிறகு தாயை அக்குஞ்சுகளே தின்று தீர்த்து விடும் என்று சொல்வார்களே, அப்படி அந்த இனம் இருக்கிறது. கிடைத்தால் போதும் ஒப்புக்கொண்டால் போதும். ஆக்டோபசு என்று சொல்வார்களே, கடல் உயிரி, அது தன் விரல்களையெல்லாம் நீட்டி வருகின்ற வற்றை அப்படியே உண்டு விடும்; அதுபோலச் செய்வது அந்த இனம். விழிப்பாக இல்லையென்றால் மறுபடியும் பேசத்தான் செய்வார்கள்; எல்லாவற்றிலும் வல்லவர்கள் நாங்களே என்று சொல்லுவார்கள். எல்லா மொழிகளுக்கும் அடிப்படை வடமொழியே என்று சொல்லுவார்கள். சொல்லாமல் இருக்கின்றார்கள் என்பதற்குக் கரணியம் இப்படிச் சிலர் அங்கங்கே எழுதிக் கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பதினால்தான். இந்த நிலையையும் இல்லாமற் போகுமானால்

உறுதியாக நாம் அழிந்தே போய் விடுவோம். வ. இரா. அவர்கள் சொன்ன ஒரு கருத்தைச் சொல்லி இதை முடித்துக் கொள்கின்றேன்.

"தமிழைக் கொண்டுதான் நாம் உயரமுடியும். ஒற்றுமையாக வாழமுடியும். அந்த ஒரு (சாதனம்) கருவிதான் நமக்கு மிஞ்சியிருக்கிறது. அதையும் கைவிட்டு விட்டுக் கையைப் பிசைய வேண்டாம்" என்று சொல்லியிருக்கின்றார்.

"வடமொழி தமிழுக்குக் கடன் பட்டது. தமிழினின்றும் தோன்றி வளர்ச்சி யடைந்து தமிழையே அழிக்கப் பார்க்கின்றது" என்பதை, வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் - பரிதிமாற் கலைஞர் என்று பெயரை மாற்றிக் கொண்டாரே அவர்-தமிழ் மொழியின் வரலாறு என்ற நூலில் மிகத் தெளிவாகக் குறித்திருக்கின்றார்.

இதையெல்லாம் சொல்வதற்குக் கரணியம் இதுதான். விழிப்புணர்ச்சி இல்லையென்றால் நாம் அழிக்கப்படுவோம். நம் கழக இலக்கியங்களிலே நாவலந்தண்பொழில் என்ற குறிப்பு இருக்கின்றது. பஃறுளியாறு, பன்மலைக் குமரிக்கோடு பற்றிய குறிப்புகள் உண்டு. 'மலிதிரையூர்ந்துதன் மண் கடல் வௌவலின்' என்று கலித் தொகை குறிக்கின்றது. இக்குறிப்புகளெல்லாம் பழந்தமிழ் நாட்டைக் குறிப்பிடுவனவே ஆகும். தமிழர்கள், முன்னவர்கள், மூதாதையர்கள் என்று குறிக்கும் பொழுது தென்திசையைத்தான் குறிக்கிறார்கள்: தென்பகுதிதான் தமிழருடைய முன்னோர், மூதாதையர், பழந்தமிழர் வாழ்ந்த இடம். எஞ்சிய இடத்திலே இன்றைக்கு நாம் ஒட்டிக்கொண்டு, வாழுகின்றோம். இந்த இடத்தையும் இழந்து கொண்டு, இன்றைக்குச் சென்னை மாநிலமென்னும் சிறிய பகுதியை வைத்துக்கொண்டு இருக்கின்றோம் விழிப்புணர்ச்சி யில்லையென்பதால். வரலாற்றாசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், தமிழ்ப்பற்றாளர்கள் இவர்களெல்லாம் சொன்ன கருத்துகளை உலகம் நேரிடையாக இது வரை மறுக்கவில்லை. ஆகவே தமிழன் பிறந்தகம் குமரிநாடு, தொன்மையான நாடு, அவனும் தொன்மையானவன், அவன்மொழி மிகமிகத் தொன்மையானது என்னும் கருத்தை நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதோடு அமைகின்றேன். வணக்கம். O

குமரிக் கண்ட வரலாறு ஏற்கனவே ஒப்பப்பெற்ற கருத்து!

மேனாட்டு ஆய்வாளர்கள் அனைவரும் இக் கருத்தை ஒப்பியவர்களே !

பிராமணன் தனித்தமிழை ஏன் வெறுக்கின்றான்? தனித்தமிழ் இருந்தால் அவன் வாழ்க்கை நடைபெற முடியாது!

நம் தீயூழ் ஒன்று உள்ளது. நல்ல முயற்சிகளுக்கு என்றுமே ஊக்கம் தருவதில்லை

தமிழனைப் பற்றியும் தமிழைப் பற்றியும் தாழ்வாக எழுதிய நூல்களெல்லாம் மிகுதியும் மேனாடுகளில் பரவுகின்றன!

தஞ்சைக் கருத்தரங்கில் பேராசிரியர் வீ. ப. கா. சொல்லழகனார் பேச்சு!

அறிவு சான்ற தலைவரவர்களே! மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களே! இந்தியா முழுவதிலும் அறிவியல் துறையிலே புதுமை காட்டிய அறிவியல் வல்லுநர் அவர்களே! பேரறிஞர்களே! தமிழின்பால் பற்றுக் கொண்ட பெரியோர்களே! அனைவருக்கும் வணக்கம்.

சிறுகதை ஒன்றுடனே தொடங்க விரும்புகின்றேன்.

"ஒரு நாய் இராமேசுவரம் போனது. அது போய்த் திரும்பி வந்த பொழுது இன்னொரு நாய் பார்த்து, என்ன அண்ணே உங்க 'வழிச் செலவு எப்படி இருந்தது?' என்று கேட்டது. அதற்கு அந்த நாய், நன்றாகத்தான் தம்பி இருந்தது; பாருங்கள்! அங்கங்கே போகு மிடங்களிலெல்லாம் நம்முடைய இனந்தான் நம்மை விரட்டினதே தவிர வேறொன்றுமில்லை. எந்த எச்சில் தொட்டிக்குப் போனாலும் சரி; கன்றுக்குட்டி பேசாமல் இருந்தது; பன்றி அதன் பாட்டுக்கு இருந்தது. மாந்தன்கூட அவன் பாட்டுக்கு இருந்தான். ஆனால் நம்ம இனந்தான் குபீர் குபீர் என்று பாய்ந்து வந்தது." என்று சொல்லியதாம்.

எனக்கு முன்னர்ப் பேசிய நிலவழகனார், நிலத்தை அளந்த அழகனார், நிலமுழுவதும் எப்படி அமைந்திருக்கின்றது என்று மிக நன்கு ஆராய்ந்து தொகுத்துக் கூறினார். அவர் கூறியதிலேயே எல்லாக் கருத்துகளும் வந்து விட்டன. புதிதாகச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. சுருக்கம் என்னவென்றால் மேலைநாட்டு ஐரோப்பிய அறிஞர்கள் எல்லாருமே மாந்தன் பிறந்தது குமரிக்கண்டமே என்று பல்வேறு சான்றுகள் காட்டி நிறுவுகின்றனர். மறுப்பவன் நம்மவன் தான். வேறு எவரும் இல்லை. இஃது அனைவரும் அறிந்த ஒன்று. எப்பொழுதும் மறுப்பான்; சூழ்ச்சி செய்வான்; வெறுப்பான்.

கதிரவனிலிருந்து ஒரு சிறுபகுதி பிய்ந்துவந்து சுழன்று குளிரடைந்ததே இந்நிலப்பகுதி என்பது அறிவியல். இதை எல்லாரும் அறிவீர்கள். நான் உங்களைக் கேட்கின்றேன். இந்நிலத்தில் முதன் முதல் குளிர்ந்த பகுதி எதுவாக இருக்கும். சிலர் சொல்லலாம். ஞாலத்தில் வடமுனை தென்முனைப் பகுதிகள்தாம் முதலில் குளிர்ந்திருக்கும் எனலாம். ஆனால் அவை முதலில் குளிர்ந்திருக்க முடியாது. ஏனென்றால் மிகுந்த வேகத்துடன் நிலத்தின் எந்தப் பகுதி சுழல்கின்றதோ, அந்தப் பகுதிதான் முதலில் குளிர்ந்திருக்க முடியும். ஆகையால் நிலநடுக்கோட்டுப் பகுதி(அஃதாவது பூமத்திய ரேகைப் பகுதி)தான் முதலிலே குளிர்ந்திருக்க வேண்டும். எனவே அந்தப் பகுதியில்தான் முதல் மாந்தன் தோன்றியிருக்க முடியும். யாராவது இதை மறுத்துவிட முடியுமா? இதை நிலவழகனார் நல்ல சான்றுகளுடன் எடுத்துக் காட்டினார்.

பொதுவாகவே ஐரோப்பியர்கள் ஆராய்ச்சி முடிவுகளை நடுநிலையுடன் சொல்லுபவர்கள். நம்மவன் பொறாமை, நடுநிலை திறம்பிய தன்மை, தனக்கு மேலுள்ளவர்களிடம் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம், அவர்களைக் கால், கை பிடித்து வாழ விரும்புதல் ஆகிய கரணியங்களால் எப்பொழுதுமே சரியான முடிவை ஒப்புக்கொள்ள மாட்டான். மேலைநாட்டவர் அவ்வாறு அல்லர். எப்பொழுதும் சரியான முடிவுகளைத் துணிந்து சொல்பவர்கள். எனவே அவர்கள்தாம் மாந்தன் முதன்முதலில் நில நடுக்கோட்டுப் பகுதிகளிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். அவ்வாறு முதலில் தோன்றிய மக்கள் ஆப்பிரிக்கப் பகுதியிலுள்ளவர்களும், ஆத்திரேலியப் பகுதியில் இருந்தவர்களும் சாவா, சுமத்திரா, போர்னியா முதலிய தீவுகளில் வாழ்ந்திருந்தவர்களும்தாம்: இவர்களுக்குள்ளே முதன் முதல் பண்பாடும் நாகரிகமும் எய்தியவனும், மொழி, இலக்கிய, இலக்கணங்களைத் தோற்றுவித்தவனும் எவன்?

ஆப்பிரிக்கக்காரனு? அல்லது ஆத்திரேலியனு? தமிழன்தானே அவ்வாறு திருந்திய நாகரிகமும் மொழி நிலைகளையும் பெற்றவன். இதனை அறிவுள்ள எவனும் ஒப்புவானே!

நம் பாவாணர் அவர்கள் குழந்தை மனம் கொண்டவர்கள். எனவேதான் மேற்கண்ட கருத்தை மறுப்பதற்கு இம்மாநாட்டைக் கூட்டியுள்ளார்கள். இதை எதிர்க்க எவனுவது வரமுடியுமா? வரவே மாட்டான். நான் பாவாணர் அவர்களுக்குச் சொல்கின்றேன் இது போல் பத்து மாநாடுகளைக் கூட்டினுல்கூட உங்கள் கருத்தை எதிர்த்துப் பேச ஒருவரும் வரமாட்டார்கள். எப்படி எதிர்க்க முடியும்? ஏன் எதிர்க்கிருர்கள்? எதிர்ப்பதாலுல் எழுத்திலேயே நேருக்கு நேர் எதிர்த்திருக்க வேண்டுமே! இப்படி மாநாட்டிலேயா வந்து எதிர்க்க முற்படுவார்கள்? அவ்வாறு எதிர்க்கவும் முற்படமாட்டார்கள். மறுப்பாகவும் எழுதமாட்டார்கள். ஆனுல் வெறுப்பார்கள். அதிலேதான் அவன் கமுக்கமே இருக்கிறது. எதிர்க்க மாட்டான்; மறுக்கமாட்டான்; ஆனுல் வெறுப்பான்; தண்டிப்பான்; சூழ்ச்சி செய்வான்; பதவியிலிருந்து நீக்குவான்; வேறு பதவிகளும் தரமாட்டான்; இப்படித்தான் செய்வான்.

இனி, மாந்தன் தோன்றி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் சென்ற பின்னர்தான் மொழி தோன்றி, சொல் தோன்றி, இலக்கியந் தோன்றி, இலக்கணம் தோன்றி, எழுத்துத் தோன்றியிருக்க வேண்டும். அவ்வாறு முதன் முதல் எழுத்தைக் கண்டு பிடித்த முதல் மாந்தன் தமிழனே!

மாந்தத் தோற்றம் எவ்வாறு நிகழ்ந்தது? முதலில் ஓரிடத்தில் ஒருவன் தோன்றி அவனிடத்திலிருந்து இந்த மாந்த இனம் தோன்றியதா? இல்லை ஆங்காங்கு மாந்தர்கள் காலவட்டத்தில் தோன்றினுர்களா? இவற்றுள் ஒருவன் தோன்றினுன் என்பது பைபிளின் கூற்ருகும். இதேபோல் பல கூற்றுகள் உண்டு. எங்கேயும் ஒரே ஒரு செடி தோன்ருது; புல்லும் ஒன்றே ஒன்று தோன்ருது. ஒரே காலத்தில் பல செடிகள் தோன்றுகின்றன; புற்களும் அப்படித்தான் மாந்தனின் தோற்றமும் அவ்வாறுதான் இருந்திருக்க வேண்டும். அப்படி அவன் தோற்றமும் உலகில் முதன் முதல் குளிர்ந்த நிலப்பகுதியாகியதும், நிலநடுக்கோட்டுக்கு அண்மையிலே இருந்ததுமான குமரிக் கண்டப் பகுதியாகவே இருந்திருத்தல் வேண்டும். இக் கருத்துக்கு இருசாரார் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஒருசாரார் பிராமணர். இரண்டாவது சாரார் கிறித்துவர்; தனித்தமிழ்ப் பற்றுக்கும் இவர்களேதாம் எதிராளிகள்.

பிராமணன் தனித்தமிழை ஏன் வெறுக்கின்றான் என்றால் அவன் வீட்டுச் சடங்குகள் யாவும் வடமொழியில் நடைபெறுவனவாகும். நம் வீடுகளிலேயும் அவற்றையே நிகழ்த்துவான். எனவே இத்தகைய மந்திர முணுமுணுப்புகளுக்கெல்லாம் அவனுக்குவடமொழியே தேவை. தனித்தமிழன்று. தனித்தமிழிருந்தால் அவன் வாழ்க்கை நடைபெற முடியாது. அடுத்தபடி கிறித்தவரெல்லாரும் ஏன் மறுக்கின்றாரென்றால் அவர் அறியாமை. முதன் முதலில் 'பைபிளை' எழுதியவர்கள் நிறைய வட சொற்களைக் கலந்து எழுதி விட்டனர். அவ்வாறு எழுதியவை கடவுளே எழுதியவை என்று நினைத்து விடுகின்றனர். அந்தச் சொற்களை மாற்ற அவர்கள் ஒருப்படுவதில்லை. எனவேதான் தனித் தமிழ் முயற்சிக்கு எதிர்ப்புகள் இருக்கின்றன.

இன்னும் பலர் நினைத்துக்கொள்கின்றார்கள், இப்படிப்பட்ட முயற்சிகளிலெல்லாம் ஈடுபட்டால் உடனே பதவிகள் போய்விடும். பதவிகள் போய்விட்டால் உடனே 'நாமெல்லாம் செத்துப் போய்விடுவோமே' என்று. பாவாணர் அவர்களுக்கு அண்ணாமலை நகரில் பதவி போய் விட்டது. அதனால் அவர் இறந்தா போய்விட்டார். இல்லை; சாக மாட்டோம். ஆனால் பலரும் அப்படி இறந்து போய்விடுவோம் என்ற நினைவில்தான் தமக்குக் கிடைத்த பதவிகளைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அஞ்சவே வேண்டா. பதவி போனால் யாரும் உயிர்வாழாமல் போய்விடுவதில்லை. அவர்களுக்கு ஒன்று சொல்கின்றேன். எவன் ஒருவன் இழக்கின்றானோ அவன் பெறுவான். அஃது இயற்கையியல்; இறைமையியல். தேவநேயப் பாவாணர் அண்ணாமலைப் பதவியை இழந்தார். வேறொரு பணி அவருக்குக் காத்துக் கிடந்தது. அவர் இக்கால் செய்கின்ற பணி எவ்வளவு பெரிய பணி. வேண்டுமானால் பதவியில் இருப்பவன் வீடு வாங்கலாம்; நிலம் வாங்கலாம். ஆனால் வயல் வாங்கினாலும் நிலம்வாங்கினாலும் அரைக்கால்படி அரிசிக்குமேலே சாப்பிட முடியாது. ஆனால் நிலம் இருக்கிறது; வீடு இருக்கிறது என்று பெருமை பேசிக் கொள்ளலாம். அந்த வீண் பெருமை தேவையில்லை: நமக்கென்று என்றைக்கும் அரைக்கால்படி அரிசி உணவு இருக்கவே செய்யும். நாம் செய்யும் தொண்டால்தான் நாம் பெருமை பெறுதல் வேண்டும். சொத்துகளால் அன்று:

ஓர் எடுத்துக்காட்டு சொல்கின்றேன். ஒரு பொத்தக மொழி பெயர்ப்புக்கு என்னை அழைத்தார்கள். நான் அந்த வேலையை அவர்கள் விரும்பும்படி செய்து முடித்திருந்தேனானால் அக்குழு கூடும் ஒவ்வொரு முறையும் உருபா இருநூறு படியாகப் பெற்றிருப்பேன். ஆனால்

அங்குப் போனவுடன், அந்தப் புத்தகத்தில் உள்ள வடசொற்களை யெல்லாம் முதலில் நீக்க வேண்டும் என்று போராடினேன். ஆனால் அந்தக் குழுவில் இருந்தவர்கள் எல்லாரும் சேர்ந்து வடசொற்களை நீக்குவற்கு மாறாக என்னையே அக்குழுவிலிருந்து நீக்கிவிட்டார்கள். [பெருத்த சிரிப்பு] ஆனால் அந்த 200 உருபாவை நான் இழந்து போனதால் நான் ஒன்றும், இறந்து போய்விடவில்லை. சிலர் நினைக்கின்றார்கள் "ஐயோ இருநூறு உருபா வருவாயை இழந்து போய் விட்டால், வீடு போய் விட்டது? குழந்தைக்கெல்லாம் திருமணம் நடவாது; பின்னே என்ன செய்வது" என்று நினைத்து இடிந்துபோய் விடுகின்றார்கள். இப்படி நினைத்து நினைத்துத்தான் தமிழன் தாழ்ந்து போய் விட்டான். அன்று ஊர்க்காவலரைக் கண்டு அஞ்சினான்; இன்று தமிழன் எதையெதையோ கண்டு அஞ்சுகின்றான்: இவனை எப்படித் தன்னுரிமை உள்ளவன், விடுதலை பெற்றவன் என்று சொல்வது?

நம் தீயூழ் ஒன்று உள்ளது. நல்ல முயற்சிகளுக்கு என்றுமே ஊக்கம் தருவதில்லை. தமிழனைப் பற்றியும் தமிழைப் பற்றியும் தாழ்வாக எழுதிய நூல்களெல்லாம் மிகுதியும் மேனாடுகளில் பரவுகின்றன. அவனின் உண்மை வரலாற்றை எழுதி அவ்வாறு பரப்ப முடிவதில்லை. இது நமக்கு உள்ள ஒரு வாய்ப்புக் குறைவு. தெ. பொ. மீ.போன்றவர்களுக்கே பல வாய்ப்புகள் கிடைக்கின்றன. அவருடைய ஆராய்ச்சியே சிறந்ததெனப் பாராட்டப் படுகிறது. ஆனால் அவர் தமிழுக்கு மாறாகவே ஆராய்கிறார். சுருங்கை, சுரைக் காய் போன்ற சொற்கள்கூடத் தமிழ் இல்லை என்று அவர் சொல்கிறார். அவர் தமிழை மேலைநாட்டு முறையில் ஆராய்கிறார். அப்படி ஆய்ந்து சுருங்கை, சுரங்கம் எல்லாம் கிரேக்கத்திலிருந்து வந்த சொற்கள் என்று கூறுகின்றார் நான் அவரைக் கேட்கிறேன். சுரைக்காய்கூட கிரேக்கத்திலிருந்து வந்ததா? எனவே தமிழை மேலைநாட்டு முறையில் ஆய்வது தவறு. இதைப்பற்றி அவர் (தெ. பொ. மீ.) ஆராய்கின்ற சொல்லாராய்சிகளைத் தவறு என்று காட்ட முடியும். 'தெ.பொ.மீயும் சொல்லாராய்சியும்'என்று ஓர் ஆராய்ச்சிப் பொத்தகம் எழுதினால் கூட நல்ல விலையில் விறறு விட முடியும். அவ்வளவு செய்திகளை அவர் சொல்லாராய்ச்சி பற்றிக் கூறியாக வேண்டும். அதேபோல் 'தண்டியலங்காரக் குறைபாடுகள்' என்றும் ஒரு நூல் எழுதியாக வேண்டும். அது தமிழருக்கே தேவையில்லை. இன்னும், கழக இலக்கியச் சொல்லடைவு நூல் ஒன்று எழுதப் பெற வேண்டும். அத்தகைய நூல் ஒன்றைப் பிரெஞ்சுக்கழகம் ஒன்று வெளியிட்டிருக்கின்றது. இத்தகைய எத்தனையோ நன்முயற்சிகளைச் செய்தாக வேண்டும். இவற்றை யெல்லாம் பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டும், தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே, அதில் ஐயமில்லை, என்றும் சொல்லிக் கொண்டும் என் உரையை முடித்துக் கொள்கின்றேன். O

நீங்கள் செ. சொ பி-இல் ஓர் உறுப்பினரானால் என்ன?

O: 178: தென்மொழியை எரிப்போம்!

தமிழ் மறவனே! தமிழியக்கப் பாசறை, தமிழ் மன்றம், கலை இலக்கியப் பெருமன்றம், ஆகிய மன்றங்களின் சுவைஞர்கள் ஒன்றிணைந்து எழுதிக் கொண்ட தமிழ் மறவர்களின் உணர்ச்சி மிகு வேண்டுகோள்! தமிழுக்காக வாழ்கின்றவனே, உழைக்கின்றவனே உண்மைத்தமிழன் என்றுரைத்தாய். ஆனால் இப்போது அருட் செல்வர் ஆட்சியை அரண் இட்டுக் காக்க' என்று எழுதி யுள்ளாய். எந்த மாணவர்களால் உன்னுடைய "தென்மொழி" ஏடு காக்கப்படுகிறதோ, அவர்களாலேயே அழிக்கப்படும். நீ இவ்வாறு எழுதியதற்கு மன்னிப்புக்கோரி அடுத்த இதழில் எழுதாவிட்டால், அடுத்த இதழைப் பார்த்துக்கொண்டு அனைத்துக் கல்லூரி மாணவர்களும் அனைத்துத் தமிழ் மன்ற உறுப்பினர் களும் சேர்ந்து கொண்டு அமைதி ஊர்வலம் நடாத்திக் காந்தித் திடலில் உன்னுடைய ஏடு விரைவில் எரிக்கப் படும்.

அழகப்பா கல்லூரிக்கு நீ வந்தபொழுது உனக்காகத் தேசிய மாணவர் படைப்பிரிவு முதற் கொண்டு மாணவிகள் ஈருருக அணி திரண்டு உன்னை 'வாழ்க' என்று வாழ்த்தி வந்து கலை மன்றத்தில் அமர்த்தினோம். நீ 'கருணாநிதி என்ற பெயரை மாற்ற வில்லை' என்று சொன்னாயே; இப்பொழுது அவனோடு சேர்ந்து கொண்டுதான் ஊழல் செய்கிறாய். இதனால் எங்கள் கல்லூரியில் முதுகலை தமிழ் பயில்கின்றவர்களிலிருந்து இளங்கலை தமிழ் பயில்கின்றவர் வரை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருக்கின்றோம். உன்னால் ஏற்பட்ட இழிவு தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

'சாதி'கள் இல்லை என்று கூறிய'சண்டாளா!சந்தி சிரிப்பதற் காகவா மலையாளி என்று பிரிக்கின்றாய்? உனக்கு அருட் செல்வர் எவ்வளவு அன்பளிப்புக்கொடுத்தார்? உன்போன்ற

பச்சோந்திகளை இனிமேலாவது தமிழ் அன்னை பெறுமல் இருக்க வேண்டும் என்று தமிழ் அன்னையை வேண்டிக் கொள்கின்றேம். தமிழுக்கு உயிர் கொடுக்கிறேன் என்று கூறிவிட்டு அரசியலில் இறங்கிவிட்டாயே! தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரப்பு முறை இது தானே? தமிழ் காக்கும் வெற்பு நீதானு? தமிழ் அரிமா வாழ்க என்று வாழ்த்திய எங்களைத் தலைநாணச் செய்துவிட்டாய்! கருணாநிதி அண்ணு வழியிலா நடக்கின்ருன்? கள்ளைக் குடிக்கச் சொல்கின்ருன். கள்ளுண்ணுமையை வள்ளுவன் வலியுறுத்தவில்லையா? தமிழென்று கூருமல் தாயென்று வாழ்த்தாமல் எந்தத் திரைப்படத்திலாவது அண்ணன் புரட்சி நடிகர் நடிக்கின்ருரா? தமிழுக்காக உயிர் கொடுத்து வரும் அண்ணனை மலையாளி என்று எழுதியிருக்கின்ருயே! தமிழர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவர்கள் முறையே சேர, சோழ, பாண்டியர் ஆவார். புரட்சித்தலைவர் சேர நாட்டைச் சேர்ந்தவர். நீ இனிமேலாவது அரசியலிலிருந்து இறங்கு. இளந் தமிழர்கள் வாழ மாணவர்கள் வாழ நெஞ்சத்தோடு இனிமேலாவது தமிழுக்கு, தமிழ் காக்கும் தலைவனுக்காக உழைத்திடுவாய். காது இருந்தும் செவிடாய், வாய் இருந்தும் ஊமையாய் இருந்து, என்றைக்கு நீ கயவன் கருணாநிதி ஆட்சிக்கு உறுதுணை அளித்தாயோ, அன்றே உன்னையும் மறந்து உன் இதழையும் மறந்து விட்டோம். தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் தீங்கு செய்யும் தீயோரை உறுதியாக அழிப்போம். இது உறுதி. எனவே நீ முத்தமிழ் கற்று, முத்தமிழின் சுவை பெற்றுக் கத்தும் தமிழ்க் குயிலாய் மெத்த மகிழ்ந்து நின்ற போறிஞர்கள் வழியிலே செல்ல முனைய வேண்டும். தமிழை மறவாதே! தமிழ் மறவன் என்பதை மெய்ப்பித்துக்காட்டு!

மன்றத்தார்கள், காரைக்குடி.

(ஆசிரியர் குறிப்பு: இம்மடலை, காரைக்குடிக் கல்லூரி மாணவர்கள்தாம் இணைந்து எழுதியிருப்பர் என்று என்னால் நம்ப முடியவில்லை. ஒருவேளை அவர்களே இதை எழுதியிருந்து இம்மடலில் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் சொற்கள் மதிப்புக் குறைவாகத் தோன்றினலும் அவர்கள் உள்ளங்களையும், அங்குச் சுடர்விடும் அன்புணர்வையும் நான் நன்கு அறிவேன். அவர்கள் நம் பிள்ளைகள். எனவே அவர்கள்மேல் எவரும் கடிந்து கொள்ள வேண்டா என்று உண்மையான மொழி, இனப்பற்று மிக்க முதிர்ந்த அரசியல் உணர்வுள்ளவர்களை

வேண்டிக் கொள்கின்றேன். நம் தமிழினத்தின் எதிர்காலம் நம் மாணவர் குமுகாயத்தின் கைகளில்தாம் ஒப்படைக்கப் பெற்றிருக்கின்றது. எனவே அவர்களுக்குப் போதுமான அளவு விளக்கந் தருவதைப் பொறுத்தே நம் முயற்சிகளின் வெற்றியும் அமையும். எவ்வகையானும் அவர்களைக் கடிந்து கொள்வது நல்லது ஆகாது. அந்நிலை நுனிக் கிளையில் அமர்ந்து கொண்டு அடிக்கிளையை வெட்டுவது போல் ஆகும். இக்கால இளந் தலைமுறையினர். அனைவருக்கும் என்னைப் பற்றிய இம்மடல் படையலாக ஆக்கப் பெறுகின்றது. எதிர்காலத்தில் என் அரசியல் கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்கு இம்மடல் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கும். தென்மொழி யன்பர்கள் இதைப் படித்துவிட்டுக் கொதிப்படையாமலிருப்பார்களாக!

—பெருஞ்சித்திரன்)

0: 174: உம்மை அறியார், உண்மை அறியார்.

கண்ணின் மணி அனையவரே!

கவலை வேண்டாம். "தமிழன் அல்லாதவன் தமிழ் நிலத்தில் வலிவு பெறுதல் தமிழர்க்கு நல்லது அன்று" என்னும் தமிழ் நலத்தின் அடிப்படையில் நீங்கள் தீட்டிய ஆசிரிய உரையினைக் கண்டு தங்களுக்கு அன்பர்கள் தீட்டிய 'அன்பார்ந்த அச்சுறுத்தல்களை'க் கண்டேன். இஃது ஏமாளி நாடு. இங்கு இத்தகைய கோமளித்தனமான மடல்கள் வருவதில் வியப்பே இல்லை. நம்மை ஆளுகின்ற தமிழனைத் தட்டிக்கேட்பது என்பது உரிமை—அதைத்தான் நீங்கள் செய்து வந்தீர்கள். அந்தத் தமிழன் நலிந்து நிற்கும் போது முட்டுக்கொடுத்து தாங்குவது என்பது கடமை—அந்தக் கடமையைத்தான் நீங்கள் காலத்தே செய்தீர்கள்.

தமிழ் நலம் பேணும் தகைசான்ற உள்ளம் தங்களுடையது. அது தட்டிக்கேட்க வேண்டிய காலத்தே தட்டிக் கேட்டது. தடவிக் கொடுக்க வேண்டிய காலத்தே தடவிக்கொடுத்தது. இதை உணராமல் தங்கள் 'தமிழ் நலத்தை' 'தன்னலம்' என்போரின் சொல்லை வெட்டிப்பேச்சாய் எண்ணி விட்டுத் தள்ளுங்கள்.

தமிழன் ஒருவன் தவறான முறையால் கொழுத்தால், அவனை இன்று இல்லாவிட்டாலும் நாளை நம் இனத்தாரால் வெட்டிப்போட முடியும். ஆயின் அந்தத் தமிழனது வலிவின்மையை ஏணியாக்கித் தமிழன் அல்லாதவன் கொழுக்கத் தொடங்கிடின்—அந்த வேற்று

நாட்டுப் பறவை பறக்கத் தொடங்கும் போது நம் இனத்தால் வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறேதும் செய்ய இயலாது. வேடிக்கை பார்த்தே 'வெறும் பயல்'களாகிவிட்ட நம்மினத்தார் இப்போதும் தங்கள் வாடிக்கையான பாதையில் செல்வதில் வியப்பேது மில்லை. ஆகவே, கவலை வேண்டாம். பைந்தமிழ் நாட்டுப் பதினெழாக் குடியினன் எவனுக்குமே நீங்கள் எதிரி அல்லர் என்பதை இத்தனை நாளாகியும் நண்பர்கள் உணராதது வியப்பே. குற்றம் களையக் கடிவதால் கொற்றவனுக்கு நாம் எதிரிகளுமல்லர்; அவனைக் கொல்லும்வாளுக்கு எதிராய் நாம் வெல்லும்வாளை ஏந்துவதால் அடிமைகளுமல்லர்! இதையும் விளங்கிக் கொள்ள இயலாதவர்கள் ......ஆம்...அவர்கள் தமிழர்களாகத்தாம் இருக்க முடியும்!

பாவேந்தர் பாடல்கள் எம். சி. இராவின் படத்தில் வந்ததாக ஒருவர் மகிழ்கின்றார்–(0.346) பண்பாட்டுக்குப் புறம்பான காதல் (நெருக்கக்) காட்சிகள் படத்தை இயக்கியவர்களால் புகுத்தப்படுவ தாக இன்னொருவர் வக்காலத்து வாங்குகின்றார் (ப-52)-ஆம்...பண் பாட்டுக்குப் புறம்பானவைகளுக்கு இயக்குநர் பொறுப்பு ஆயின், பாவேந்தர் பாடல்களுக்கோ இவர்களது 'புரட்சியார்' பொறுப்பு. என்னே அன்பு? என்னே அறிவு?–அடமுட்டாள் இனமே!பாவேந்தரின் பாடல்கள் ஏதாவது எம். சி. இரா. வின் சொந்தப்படத்தில் புகுத்தப் பட்டதா? அல்லது தமிழரான திரு. வேலுமணியாரின் படங்களில் மட்டுமே எம்.சி.இரா.இல்லாத படங்களும் சேர்த்து)புகுத்தப்படுகிறதா என்பதைக்கூட எண்ணிப் பார்க்க இயலா அளவிற்கு உன் மூளை மழுங்கிக்கிடக்கின்றதே? இதை என்னென்பேன்?

(ப. 49–23) சேர, சோழ, பாண்டியர் பற்றிப் பேசிய நீர் இன்று 'மலையாள நடிகர்' என்பது எம்முறையில் சரி என்று தங்களைக் கேட்போரை எண்ணி, ஐயா, நான் உண்மையிலேயே நெஞ்சார அழுகின்றேன். இந்த இனம் இனி விழிக்குமா என ஐயுறுகின்றேன். சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவருமே ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தாம். ஆயின் ஒவ்வொருவரும் 'தனிக்குடித்-தனம்' நடத்துபவர்களாக விருந்து சேரன் மட்டும் தன்னுடைய வீட்டை இறுகப்பூட்டிக் கொண்டு இருப்பானானால், சோழனும் பண்டியனும் மட்டும் கதவைப் பரக்கத்திறந்து வைத்துவிட்டுப் படுத்தும் தூங்க வேண்டும் என்கின்றனரே; இதை எங்குப்போய் எடுத்துரைப்பது? நம்மைவேர் அறுக்க எண்ணித்தண்ணீர்

கொடுக்க மறுக்கும் சேரனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு எம்பிக்குதிக்கும் தம்பிகளில் யாராவது அந்தச் சேர நாட்டிற்குச் சென்று, (நம் தமிழ் நிலத்தில் நடிகர் இராமச்சந்திரன் செய்யும்) ஆட்சி மாற்றப் போராட்டத்தைப் போல் ஒரு போராட்டத்தை இந்த அளவிற்குச் செய்திட இயலுமா எனில், உறுதியாக இயலாது.

இந்தத் தமிழ்த் தம்பிகளை அந்த மலையாளத் தோழர்கள் மண்டையில் போட்டு அனுப்புவார்கள். மலையாளிகளின் மண்டையிலே 'சோறு' இருக்கின்றது—நம்மவர்களுக்கு அது வறட்சி. அதனால் 'புரட்சியார்' பாதையில் பூத்தெளிக்கின்றனர். இவர்கள் செய்வது இன்னது என்று இவர்கள் அறியார். ஆகவே அஞ்சா நெஞ்சனே! நம் அரும்பணி இப் பூங்காற்றுகளைப்பற்றி எண்ணிடாமல் நடக்கட்டும்.

அருட் செல்வர் (கருணாநிதி) தமிழர் என்பதால் அவர் ஆட்சிக்குத்தமிழர்கள் எதிர்ப்பாகக் கூடாதுஎனத்தாங்கள் கூறுவது முட்டாள்தனம் எனவும் பகன்று உள்ளனர். கருணாநிதி மட்டுமே தமிழரல்லர்—கக்கனும்—காமராசரும்—நெடுமாறனும் கூடத் தமிழர் —கள்தாம். ஆயின் அவர்கள் இன்று தமிழ் நிலத்தின் ஆட்சிப் பீடத்திலும் இல்லை—அவர்களின் குடுமியை எப்படியாவது நடுவன் அரசின் கையில் பிடித்துக்கொடுத்துவிட வேண்டும் என்ற நமைச்சல் எந்தத்தமிழன் அல்லாதவனுக்கும் ஏற்படவும் இல்லை. ஆகவே ஆட்சிப் பீடத்தில் இருக்கும் ஒரு தமிழன்—அவனுக்குத் தமிழகம் வரையறுத்துக் கொடுத்திருக்கும் காலத்திற்கு முன்பே-தமிழர் அல்லாதவர்களால் கவிழ்க்கப்படக்கூடாது என்னும் நேர்மையான தமிழ் நலம் நாடும் எண்ணத்தோடு தாங்கள் பகன்றதை விளங்கிக் கொள்ளாமல்-ஏதோ எப்போதும் தமிழர்கள் கருணாநிதியையே அரணிட்டுக்காக்க வேண்டும்—எனக் கட்டளை இட்டு விட்டதைப்போல் கொதித்து எழுந்திருப்பது அவர்களை நடிகர் என்னும் 'கவர்ச்சி' எந்த அளவிற்குக் கவர்ந்துள்ளது என்பதைத் தான் காட்டுகின்றதே அன்றி வேறில்லை. தாங்கள் ஆரியக் கூத்தாடிகளுடன் சேர்ந்து விட்டதாக ஒரு நண்பர் குற்றம் சுமத்தி விட்டுத் தம் முதுகில்தாமே தட்டிக் கொண்டு இருப்பதை கண்ணுற்ற போது, என் நெஞ்சம் புண்ணுற்றது.

நடிகர் இராமச்சந்திரனின் 'நான் ஏன் பிறந்தேன்?' 'நான் கடந்து வந்த அரசில் பாதை' போன்ற கட்டுரைகள் என்னும்

கரும்புத்துண்டுகளைக் காட்டித் தமிழ் இனத்தில் இருக்கும் 'தடுமாறி களை' 'புனிதப்பயணம்' என்னும் புதை குழிகளுக்குள் 'ஆனந்த விகடன்' தள்ளிக்கொண்டு இருக்க, தங்களை,-ஆரிய இனத்தை அடிவேரோடு கெல்லி எறிய அல்லும் பகலும் உழைக்கும் தங்களை-துக்ளக், தினமணிக்கதிரோடு சேர்த்து எழுதினரே -நீங்கள் திகைத்திருக்கமாட்டீர்கள்-நான் திகைத்தேன் அவ்வரிகளைக்கண்டு. அரை அம்மணப்படங்களை வெளியிடும் தினமணிக் கதிர் எங்கே? அறிவியல் கருத்துகளை அருந்தமிழில் வெளியிடும் தென்மொழி எங்கே? கோமாளிக் கூத்தடிக்கும் துக்ளக் எங்கே? ஏமாளிக் கூட்டத்தை எழுப்பத் துடிக்கும் தென்மொழி எங்கே? நடிகரின் கவர்ச்சி என்னரும் தமிழ் இனத்தை எந்த அளவிற்குத் தாழ்த்தி உள்ளது என்பதை அறிந்தே சாடிய அறிஞனே! நீங்கள் இத்தகு மடல்களை எதிர்பார்த்தே இருப்பீர்கள். ஆகவே நம் நண்பர்கள் விரும்பியதுபோல் திகைத்து இருக்க மாட்டீர்கள்.

'மலையாள நடிகர்' எனத் தாங்கள் எழுதியது நண்பர்களை வருத்துமாம். எழுதியவரின் 'நண்பர்கள்' யார் என்று நமக்குத் தெரிகின்றது. பூசி மெழுகாமல் கேரள நண்பர்கள் எனக்கூறி இருக்க லாம். -இரக்கம்! அவருக்கே அதைக் கூறக் கூசுகிறது போலும். என்னைப் போன்ற எத்தனையோ தமிழர்கள் தமிழ் நிலத்தை விட்டு வரக் கரணியமே அங்கே குவிந்து கிடக்கும் மலையாளிகளும், மார்வாரிகளும், கன்னடர்களும், ஆந்திரர்களுந்தாம். இலங்கை தன்னைச் சீர்ப்படுத்திய தமிழனை நோக்கிச் சீறிக் கொண்டிருக்கிறது; பர்மா தமிழனை வெளியேற்றிவிட்டது; வாட்டாள் நாகராசு வெட்டறுவாளோடு சுற்றி வருகின்றார்; பால்தக்காரே படை வலிவைப் பெருக்குகின்றார். ஆயின் உள்ளூர்த் தமிழ் அன்பர்களோ, 'மலையாள நடிகர்' எனக் கூறியதற்கே மனம் வருந்திப் புலம்பு கின்றனர். அட ... அடிதாங்கி இனமே! உன்னை எப்பாடுபட்டாகிலும் உயர்த்திவிட எண்ணும் என் தலைவனிடம் நீ குறைகண்டதிலே வியப்பேதும் இல்லை!

தமிழர் அன்பரே! நான் உங்களை நம்புகின்றேன்! என்னைப் போன்றே பலர் உங்களை 'ஐயம்' என்ற சொல்லுக்கே இடம் இன்றி நம்புகின்றனர் என்பதனை உறுதியாகக் கூறுகின்றேன். நீங்கள் கலைஞரை நேருரை கண்டபின், 'அவரது ஆட்சி தமிழக விடுதலைப் பாதைக்குத் தீமை பயப்பதாய் இருக்காது'

எனக் கூறியதின் பொருளை உணர்கின்றேன். தாங்கள் சரிகின்ற மண்மேடன்று—கொதிக்கின்ற எரிமலை என்பதை உணர்ந்த நானும் என்னைப் போன்ற பலரும் உங்களை நம்புகின்றோம். ஒரு மலையாள நடிகருக்காக, உங்களையும் உங்கள் மாசற்ற மனத்தையும் ஐயுறுவோர் எந்தக்காலத்திலும் இந்தத் தமிழ்மண்ணின் விடுதலைக்காகப் போராடப் போவதில்லை. ஐயனே! ஐயமே வேண்டாம்! இனம், மொழி ஆகிய இரண்டிலும் தமிழுக்குத் தனித்தன்மை பெறப் பாடுபடும் பணி தொடரட்டும். அப் பணி வெல்ல எங்கள் தோள்கள் தங்கள் சொல் கேட்டு ஆடும்! தமிழ் வெல்லும்! தமிழ்நாடு தமிழருக்கே!

—முகிலன். வெங்காளூர்.

O: 175: அவர்களே இவர்கள்!

வண்டமிழ் மறவா, வணக்கம். தென்மொழி சுவடி 10 ஓலை7–8 இதழ் கண்டேன். முகப்பு 'இனநலம் பெரிது' பாடல், மடல் பகுதிக்கும், மக்களவைப் பகுதிக்கும் விடையாக அமைந்துள்ளது. நடிகர் இராமச்சந்திரன் தனக்கென ஒரு கூட்டத்தை வளர்த்தார். அந்தக் கூட்டந்தான் அன்று நாம் கலைஞரைக் கண்டிக்கும் போழ்து எதிர்த்தது. இன்று நாம் கலைஞரைக் காக்கும் போழ்தும் எதிர்க்கிறது. அதற்காகத் தாங்கள் கவலுற வேண்டாம். நாம் நம் இனத்தைக் காப்பாற்றவும் கண்டிக்கவும் கடமைப் பட்டுள்ளோம். ஒரு நடிகருக்காக மக்களவைப் பகுதி நீண்டு இதழின் பக்கங்களை அடைத்துள்ளது வாழ்நாள் முழுவதும் பாதுகாக்க வேண்டிய 'தென்மொழி" இதழின் பக்கங்களை ஒரு நடிகருக்காகச் செலவிட வேண்டாம் என அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொடர்க நும்பணி. இன நலம் பெரிது. —வை. கந்தசாமி, மயிலாடுதுறை.

O: 176: எம். சி. இரா. ஒரு பித்தலாட்டக்காரர்

தனித் தமிழியக்கத் தளபதியாம் பாவலரேறு அவர்களே! எமது நெஞ்சக் கோவிலில் கொஞ்சிக் கொலுவிருக்கும் மறைமலை அடிகளாரின் தடம்பற்றிச் செல்லும் தமிழ்க் காவல! எளியேனின் பணிவார்ந்த வணக்கங்களை நின் திசை நோக்கிப் படைக்கின்றேன்.

உமது 'தென்மொழி' யென்னும் தீந்தமிழ்த் தாளிகையின் பல்லாயிரக் கணக்கான சுவைஞர்களில் அடியேனும் ஒருவனென்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். உமது 'அருட்செல்வர்

ஆட்சியை அரணிட்டுக் காக்க' எனும் அறை கூவல் பாவியம் கண்டு அகமிக மகிழ்ந்தேன். அது, தக்கநேரத்தில் எடுக்கப்பட்ட தகுதி வாய்ந்த முடிவாகவே எமக்குப் படுகின்றது. ஆயின் அடுத்த இதழில் தென்மொழிச் சுவைஞர்கள் பலர் தங்கள் முடிவுக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளமை எமக்கு அதிர்ச்சியைத் தருவதாய் அமைந்தது. திரு. எம். சி. இரா. ஒரு தமிழின வஞ்சகர் என்பதற்குப் பல்லாயிரக் கணக்கான சான்றுகளைக் கூற முடியும். எடுத்துக்காட்டாக ஒன்றினைக் கூறுகின்றேன். திரு. எம். சி. இரா. இலங்கை சென்றிருந்த சமையம் அங்கு அவர்க்கு அளித்த வரவேற்பிதழில் "அன்று இலங்கையை ஆண்ட திரவிட மன்னனும் இராவணனின் வழித்தோன்றலே! இன்று இலங்கையை ஆளவந்துள்ளீர்" என்றெல்லாம் புகழ்ச்சியுரை படித்தனராம். அதற்கு எம். சி. இரா. மறுமொழி பகர்கையில் "நான் இராவணனாக வரவில்லை; இராமச்சந்திரனாகவே வந்துள்ளேன்" என்று அழுத்தம் திருத்தமாக மறுத்துரைத்தாராம். 'இராவணன்' என்ற திரவிட வேந்தனின் திருப்பெயரை ஏற்றுக்கொள்ள அத்துணைக் கசப்பு அவர்க்கு ஏற்பட்டமை ஏன்? அவரது ஆரிய அடிவருடும் பண்பே காரணியம் என்க. மேலும் அவரைச் சுற்றியுள்ள கூட்டத்தினர் மலையாளிகளும் ஆரியப் பார்ப்பனருமே! எடுத்துக்காட்டாக 'வித்துவான்' வே. இலக்குமணன் (தினமணிக்கதிர்) ஆனந்தவிகடன் மணியன் போன்றோரும் புதிதாகப் போய்ச்சேர்ந்திருக்கும் "புதுக்கவிதை" எனறு தமிழ்க் கொலை செய்யும் நா. காமராசன் போன்ற தமிழ்ப் பகைவர்களுமே எம். சி. இரா. வுக்கு அடிதாங்கி ஆலவட்டம் வீசுகின்றனர். மேலும் 'அ. தி. மு. கவின் கொள்கை அறிஞர் அண்ணாவும், இராசாசியும் வகுத்த கொள்கை' என்று எம். சி. இரா. கூறுவது எத்துணைப் பித்தலாட்டம்? அண்ணாவின் கொள்கையும் இராசாசியின் கொள்கையும் எவ்வளவு முரண்பட்டவை? தமிழர் நலன் கருதி வாழ்ந்த அண்ணாவும், பார்ப்பனர் நலனுக்காகவே வாழ்ந்த இராசாசியும் இருவேறு முனைகள் அல்லவா?

மேலும் எம். சி. இரா. நன்கொடை நல்குவதாகத் தாள்களில் விளம்பரம்படுத்தி விட்டுப் பின்னர் நன்கொடை கேட்க வந்த நல்லவர்களை அலைக்கழித்த அவலக் கதைகள் பல. அவரை நம்பிப் பல்லாயிரக்கணக்கான தொகையைப் படத்துறையில் முடக்கி ஏமாறிய

செல்வர்கள்(திரு.லேனு செட்டியார் போன்றவர்கள்)எத்தனையோபேர்? இப்படிப்பட்ட புரட்டு நடிகரா புரட்சித் தலைவராய்த் தமிழகத்தில் உலா வருவது? இவரிடம் கொண்ட மயக்கத்தால் கல்வியறிவற்ற மக்கள் பேய்பிடித்தாற் போலப் பிதற்றித் திரிவதும் ஆடுவதும், அய்யகோ, எத்துணைக் கொடுமை?

இவரை நம்பித் தமிழினம் செல்லுமாயின் தமிழினம் அழிவது திண்ணம். எனவே தங்களைப் போன்றோர் இன நலன் கருதி அரசியல் கருத்து வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது தமிழ்க் குமுகாயத்தைக் காக்கத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும். அண்மையில் என் நண்பர் ஒருவர் **'சங்கீத நாடக சங்கம்'** என்ற அமைப்பில் திரு. எம். சி. இரா.வுக்குப் 'பாரத்' பட்டம் கிடைத்ததை யொட்டி நடந்த பாராட்டு விழாவில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறினார். அப் பாராட்டு விழாவின் அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு எம். சி. இரா.விடம் காட்டப்பட்டனவாம்! அவ் வழைப்பிதழில் கலைச் செல்வி செயலலிதா பெயர் கடைசியாக அச்சிடப் பெற்றிருந்தமை கண்டு, மிகவும் சினந்து, புதிதாக அழைப்பிதழ்கள் அச்சிடக் கட்டளை யிட்டாராம். அதன்படி அவரின் பெயருக்குக் கீழ் செயலலிதா பெயர் அச்சிடப்பெற்ற புது அட்டைகள் பின்னர் வழங்கப் பட்டனவாம். இப்படிப் பித்துப்பிடித்தலையும் நடிகரா புரட்சித் தலைவர்? எனவேதாங்கள் எடுத்த முடிவே தக்க முடிவெனக் கூறித் தொடர்ந்து தங்கள் தொண்டு தமிழினம் காக்க வழங்கிடல் வேண்டுமென இறைஞ்சி இவ்வளவில் மடலுக்கு இறுதி யிடுகின்றேன். வாழ்க தமிழ்' வெல்க தமிழினம்

மு. பா. வலவன் (சாரதி) சென்னை–4.

0: 177: எம்.சி.இரா.வின் கைகளை வலுப்படுத்துக!

ஐயா, தென்மொழி சுவடி 10 ஓலை7-8இல் காஞ்சி அன்பர் திரு. சா. சு. மணியம் அவர்கள் எழுதிய நீண்ட மடலை (எண்: 170)ப் படித்தேன். ....''தி.மு.க. பிளவு ஏற்படும் முன் இதை (தி மு.க. ஆட்சி தமிழராட்சி என)க் கூறியிருந்தீர்களெனின், எவ்வளவு தமிழர்கள் தங்கள் விடுதலை மாநாட்டில் கலந்து கொண்டிருப்பார்கள்! எவ்வளவு எளிதாகத் தன்னுட்சிக் கொள்கை பரவி இருக்கும்...." என்று வருந்துகின்றார் அவர். "தாங்கள் 'தி.மு.க. ஆட்சி தமிழராட்சி' என்று சொல்லாத கரணியத்தால்தான் தி.மு.க.வினர் விடுதலை

மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. தன்னாட்சிக் கொள்கையும் பரவவில்லை" என்னும் அரிய உண்மையைக் கண்டு பிடித்து இது நாள் வரை தம் நெஞ்சில் கமுக்கமாக வைத்திருந்து இப்பொழுது தான் வெளியிடுகின்றார். இருந்தாலும் இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிப் போகவில்லை. "என்னைப் போன்று உணர்வுள்ள தமிழர்கள் (அ.தி.மு.க.) இங்கு ஏராளம்! ஏராளம்!!" என்று குதிக்கின்றார் அன்பர். எனவே ஐயா, "கலைஞரின் கைகளை வலுப்படுத்துக!" என்று தாங்கள் எழுதிய ஆசிரியவுரையை மறந்து விட்டு "எம்சி.இரா.வின் கைகளை வலுப்படுத்துக!" என்று அடுத்த இதழிலேயே ஓர் ஆசிரியவுரை எழுதி, "திரு. எம். சி. இரா. மலையாள நடிகரல்லர்; தமிழர்" என்றும் குறிப்பிடுவீர்களானால், தமிழக விடுதலைக்காக இனி தாங்கள் அரும்பாடு படவேண்டி இருக்காதோ என்னவோ? ஏனென்றால் (இராசாசியின் இறுதி-சவ-ஊர்வலத்தில் சீட்டி அடித்த-திருச்சிக்கு எம்.சி.இரா. சென்ற தொடர்வண்டியை வழிநெடுக நிறுத்தி அவர் வேலையையும், அதிகாரிகள்-பொதுமக்கள் வேலையையும் கெடுத்த) அ.தி.மு.க.வினரே தமிழக விடுதலைக்கு வழி வகுக்கத் தொடங்குவர் போலும்!

ஐயா, அ.தி.மு.க.வின் புரட்சித் தலைவரைப் பற்றி நல்ல செய்தி ஒன்று இப்போது நினைவுக்கு வருகின்றது. மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் மணிவிழாக் குழுவிலே அவர் ஓர் உறுப்பினராக இருந்ததால்தான் பாவாணர் அவர்களுக்கு மொத்தம் உரு: 2000,000/- (புரட்சிகரமாக மூன்று சுன்னங்களைமட்டும் பின்னால் சேர்த்துள்ளேன்) உள்ள பணமுடிப்பு திரட்டிக்கொடுக்க முடிந்தது! (பர்.மெ. அழகனார் பாவாணர்க்காக நடையாய் நடந்தும் மனமிரங்காத-மணிவிழாக்குழு உறுப்பினரான) அவர் (நடிகர் இராமச்சந்திரன்) இப்போது பாவாணர் அவர்களிடம் ஓடோடி வந்து செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியிட எத்தனை இலக்கம் உருபா வேண்டுமானாலும் தருவார் (ஆனால் ஒன்று அவருடைய உதவி நல்ல விளம்பரம் தருவதாக-மக்களுக்குக் கவர்ச்சி தருவதாகப் புரட்சியாக அமைய வேண்டுமே!) ஆகவே "நடிகர் இராமச்சந்திரன் கைகளை (அல்லது இடுப்பை) வலுப்படுத்துக!" என்று தலைப்பிட்டு அருள் கனிந்து ஓர் ஆசிரியவுரை எழுதவும்.

தாங்கள் கலைஞர் தாம் நிலையாக ஆளவேண்டுமென்று கூறியது போலவும்; ஊழல்கள் இருக்கத்தாம் இருக்கும் என்று சொன்னது

போலவும், குற்றங் குறைந்து நன்னிலை ஆகவேண்டா என்று சொன்னது போலவும் 'கலைஞர் பட்டம் பெறுகையில் ஏன் பாராட்டவில்லை, இப்போது ஏன் துணை செய்கிறீர்கள்'என்றும் ("கேட்டினும் உண்டோர் உறுதி..."என்னும் குறளை உணராமல்) பிற இனத்தவர் மீது பகைமை பாராட்டுவது போலவும் 'குற்றச் சாட்டுகளுக்கு நேருக்கு நேர் விடைகூற முடியும்' என்று தாங்கள் குறிப்பிட்டதைப் பற்றிக் கொண்டும் தங்களுடைய வெற்றி தோல்வியை ஆய்கின்றாரே தவிர, தமிழினத்தின் வெற்றி தோல்வியை அவர் ஆய்ந்ததாகத் தெரியவில்லை. அட்டைக் கத்திக் காட்சிகளும், அருவருப்பு நடிப்புகளும், திரு. எம். சி. இரா. நினைத்தால் விலக்க முடியாதனவல்ல. (அவருக்காகவே கதையாசிரியர்களால் அக்காட்சிகள் உருவாக்கப் பெறுகின்றன என்பதை அன்பர் காட்டிக் கொள்ள விரும்பவில்லை போலும்) "அவளைப் போடாதே, இவளுடன் தான் நடிப்பேன், இயக்குநரை மாற்று, இந்தப் பாட்டின் அடியை இப்படி மாற்றச் சொல்லு, இல்லையேல் பாட்டே வேண்டாம்" என்று தேவையில்லாதவற்றில் தலையிட்டு முரண்டு பிடிக்கும் அவரால், அருவருப்புக் காட்சிகளை நீக்க முடியாமலா போகும்? இவை எல்லாப் படங்களிலும் வரும் இயல்புக் காட்சியென்றால், 'எல்லா மாநிலங்களிலும்தான் ஊழல் இருக்கின்றன' என்று சொல்வதில் தவறு சொல்ல முடியாதே.

—அன்பழகன், இராசபாளையம்.

"வலம்புரி"

ஆசிரியர்: புலவர் இறைக்குருவனார்

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் திங்களிரிதழ்.

தனியிதழ் 0-25 காசு

ஆண்டுக்கட்டணம் 6 உருபா. அரையாண்டுக் கட்டணம் 3 உருபா.

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி மதுரை-10.

'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர். உலக முதல்வி

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்

'தமிழம்', 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-2.

செய்திகள்

உரத்தநாடு- உ. த. க., த. வி. இ. கூட்டங்கள்:

10—12—72 (ஞாயிறு) உரத்த நாட்டில் உ. த. க. கிளை உறுப்பினர் கூட்டமும் த. வி. இயக்க அமைப்புக் கூட்டமும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தன. இக் கூட்டத்தில் தஞ்சை மாவட்ட உ. த. க. அமைப்பாளர், புலவர் திரு. ச. தமிழனார், புலவர் திரு. அடல்எழிலன் முதலிய அனைவரும் கலந்து கொண்டனர். வட்ட அமைப்பாளர் திரு. பழ. மணிவண்ணன் கூட்டம் சிறப்புற நடந்தேற அனைத்து முயற்சிகளையும் செய்தார்.

மின்பாறை: தென்மொழி அன்பர் கூட்டம்:

கடந்த சுறவம் 'கரு'-ஆம் நாள் (28—1—73) அன்று மின் பாறைத் தென்மொழி அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'வரலாற்றில் நாம்' என்னும் தலைப்பில் 3 மணி நேரம் ஓர் அரிய சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்குப் புலவர் திரு. அமுதனார் தலைமை தாங்கினார். கூட்டம் மிகச் சிறப்புற நிகழ இதன் அமைப்பாளரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு முகவருமான திரு. கி. பெருமாள் அவர்களும், அவர்தம் அண்ணார் திரு. கி. பாலு அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மகிழ்ந்து பாராட்டும்படியாக இருந்தன.

ஆனைமலை: உயர்நிலைப்பள்ளிக் கூட்டம்:

கடந்த 29—1—73 (திங்கள்) அன்று ஆனைமலை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 'சொல்விருந்து' என்னும் தலைப்பில் 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். இச் சொற்பொழிவால் மாணவர்களும், ஆசிரியர்களும் மிகவும் பயனடைந்தனர் என்று சொல்லலாம். பாவலரேறு அவர்களுடன் சென்றிருந்த திருக்குறள் பெருமாள் இக் கூட்டத்திலும் மின்பாறையிலும் பேசினார்கள்.

திருமண நன்கொடை

நெடுநாளையத் தென்மொழி உறுப்பினரும் செ. சொ. பி. பேரகர முதலித்திட்ட உறுப்பினருமாகிய திரு. இராமசாமி அவர்களுக்கும் செல்வி எசுத்தர் சான்சி அவர்களுக்கும் கடந்த துலை 9-ஆம் நாள் (25—10—72) திருநெல்வேலி எழில் நகரில் திருமணம் சிறப்பாக நடந்தது. அதன் நினைவாகத் தென்மொழிக்கு அவர்கள் அனுப்பியுள்ள நன்கொடை உரு: 30-00-க்கு நன்றி கூறி அவர்கள் நீடுழி வாழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

மருத்துவரின் தொண்டுள்ளம் வாழ்க!

சேலம் அரசினர் பொது மருத்துவமனை மருத்துவர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்கள் பொங்கல் விழாப் பரிசாகத் 'தென்மொழி'யின் வளர்ச்சிக்கு உரு: 101/-அனுப்பியுள்ளார்கள். அவர்தம் தொண்டுள்ளத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

0: 355: தி. மு. கழகத்தைக் கண்டித்தே வந்த தாங்கள் இன்று அதைக் காக்க முனைவது பலருக்கு வியப்பளிக்கலாம். தங்கள் ஆசிரியவுரையை ஊன்றிப் படிப்பவர்களுக்கு இந்த வியப்பும் ஏமாற்றமும் அடைய வழியே இல்லை. தாங்கள் எண்ணத்தை ஆய்ந்து அறியாமல் தாங்கள் கலைஞரிடம் கையூட்டு வாங்கிவிட்டதாக அன்பர்கள் எண்ணுவது என் வருத்தத்தை மிகுதிப்படுத்தியுள்ளது. தன் குடும்ப இன்பத்தையே தமிழுக்கும்–தமிழ்நாட்டின் விடுதலைக்கும் ஈந்துவரும் தாங்களையா இக்கொடிய சொல்லுக்கு இலக்காக்குவது? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது. இனநலம் இழிவாகும் நிலை ஏற்பட்டுள்ள இன்றைய நிலையை எண்ணித் தாங்கள் எழுதிய ஆசிரியவுரையை உண்மையான தமிழர்கள் பாராட்டக் கடமைப் பட்டுள்ளார்கள். கடந்த கால அரசியல் அறிவும், ஆய்ந்துணரும் ஆற்றலும் உடையவர்கள் தமிழர் இனநலம் கெடும் நேரங்களில் எல்லாம் எச்சரித்தே வந்துள்ளார்கள்.

தாங்கள் எத்தனையோ தடவைகள் இவ்வாட்சியைக் கண்டித்து வந்துள்ளீர்கள், அவர்கள் நல்வழி வரவேண்டும் என்பதற்காக. அதை நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். அதைப்போன்று அந்த ஆட்சிக்குக்கேடு நேரும் என்றாலும் அதை நாம் தவிர்க்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை மறந்துவிடக்கூடாது. நம்முடைய விடுதலைப்பயிர் தழைக்க இவ்வரசு நீடிக்க வேண்டும் என்று எண்ணும் தமிழர்கள் பலரில் நானும் ஒருவன். திருச்சியில் நடத்திய விடுதலை மாநாடு போன்று வேறு ஓர் ஆட்சியில் நடத்திவிட முடியுமா? அப்படி நடத்துவதற்கு இன்றைய தமிழர்கள் விழிப்படைந்துள்ளார்களா? எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

—மாங்குடிமருதன்-மருதவனம் தஞ்சை.

0: 356: "அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க' எனும் தென்மொழியின் ஆசிலாவுரை கண்டோம். உவகையுற்றோம். ஆரியப்பார்ப்பனர் அடியை நத்திப் பிழைக்கும் தமிழர்க்கும், ஆரியர்க்கும் அடிவயிற்றைக் கலக்கி, அவர்கள் மூளைக்கு முடிந்த மட்டும் உணர்வூட்டியிருக்கும். அப்படியும் உணர்வெழும்பா அம் மரமூளை மண்டையர்க்கு, புரட்சிப் பாவேந்தரின் எண்ணப்படி நாமெல்லாம் 'உதையப்பர்'களாய் மாறி அவர்களை மாற்ற வேண்டிய அந்தக்காலம் சேய்மையிலில்லை, அண்மையில்தான் உள்ளது. அந்நாளே தமிழக விடுதலைத் திருநாள்! மற்றும், தென்மொழி அன்பர்களுக்கு எச்சரிக்கை என்னும் அறிக்கையை அகமகிழ்ந்து கண்டோம். இந்த நிலையில் அந்த அறிக்கை மிகமிகத்தேவை அந்த அருமை (!) நண்பர்கள், அழகு அண்ணுக்களிடம் தென்மொழி அன்பர்கள் அடிபடக் கூடாது என்பதற்காகத்தான். ஏனெனில், அத்தகையாரிடத்து அடிபட்டோர் நாங்கள். நம்மில் மனவிடுதலை–தான் வேண்டுமென்று மாரடிக்கும் மாமேதைகள் ஒருபுறம். அண்ணு வழியில் அரசியல் என்று சொல்லிக்கொண்டு, 'என்னப்பா? பிடுங்கி' என்ற சொற்களை அளவிடாது, எளிதாக வீசும் ஏந்தல்கள் ஒருபுறம். இப்போதுதான் அறிவு அற்றவர்கள், அறிவு உற்றவர்களாகத் தம்மைக் கருதிக்கொண்டு அடிமட்டமான செயல்களைச் செய்துகொண்டுவரும் அறிவூறிகள் ஒருபுறம். தங்களைப் பகுத்தறிவாளர்கள் என்று கருதிக் கொள்ளும் குமுகாயப் புரட்சிப்புலிகள் ஒருபுறம். இவர்களை வைத்துக் கொண்டு தமிழ்நாடு எப்படி விடுதலை அடைய முடியும்? கலைஞரிடம் கேட்ட கேள்விகளில், 'பாவாணர்

பாராட்டப் பெற்றூர்' என்பதைப் படித்த நாங்கள் மகிழ்ச்சி யடைய வில்லை. மிரட்சி யடைந்தோம். கலைஞரை நாங்கள் விரும்புகிறேம், கலைத்துறையில். அவர் அரசியலில் ஆடுகின்ற ஆட்டத்தைத் தமிழ்த் துறையில் ஆடவேண்டிய தில்லை. பாவாணர் போற்றப் பட்டால் மட்டும் போதாது. அவரின் அறிவு போற்றப்பட வேண்டும். அவருடைய கருத்துகள், நூல்கள் தமிழர்களின் மூளையில் ஏற்றப்பட வேண்டும். — சி. வெ. தமிழ்மாணிக்கம், சி. கா. தமிழ்நெஞ்சன் அரங்கத்தமிழ்மணி, சி. ப. கலைமாணிக்கம், கோவை–5.

0 : 357 : தென்மொழி–துலை–இதழில் தங்களின் ஆசிரியவுரை மிகச் சீரிய முறையில் அமைந்திருந்தது. "கலைஞர் ஆளும் இவ் வரசு அவருடையதன்று; தமிழருடையது. ஆரியக் கலப் பற்ற தூய தமிழருடையது. எந்தமிழர் நிறுவிய இவ் வாட்சிக்கு ஏதம் வரவிடோம்" என்பவை உரையின் உயிர் நாடியாக விளங்கின. இதைக் கண்ணுற்ற தென்மொழி அன்பர்கள் சிலர் தாங்கள் ஏதோ தடம்புரண்டதாகக் கருதித் தங்கட்கு எழுதியுள்ள மடல்களையும் கண்டேன். அவை அவரவர்களின் மனநிலையையும், மயக்கையுமே காட்டுகின்றன. கண்டிப்பது வேறு, காப்பாற்றுவது வேறு என்ற தங்களின் விளக்கவுரை அவர்கட்கு எடுபடவில்லை போலும். அடிப்படைக் கொள்கையில் தெளிவும் முன்னேக்கும், பின்னேக்கும் கொண்ட ஓர் அறிஞன் ஒரு நிலையில் எடுக்கும் முடிவு பொதுமாந்தர்க்கு மருட்சியாக இருக்கலாம். மகனின் எதிர்கால நல் வாழ்வுக்காக அடித்தும், கடிந்தும் திருத்தும் தந்தைதான் மகன் துன்புறுங்கால் அன்போடு அரவணைப்பான். தென்மொழியின் நிலையும் இவ் வரவணைப்பு நிலைதானே. தி, மு. க. அரசு நெறி பிறழுங்கால், மிகுங்கால் மேற்சென்று இடிக்கும் உரிமையும், அரசுக்கு மாற்றூரால் ஊறு நேருங்கால் உடுக்கை இழந்தவன் கைபோல விரைந்து இடுக்கண் களையும் கடமையும் தென்மொழிக்கும், இதையொத்த தமிழ் நலஞ்சார்ந்த அமைப்புகட்கும், அறிஞர்க்குமே உரியனவன்றே! கழக அரசுக்கு இடிக்கும் துணையாரும் நாம்தாம்; அழிவின் கண் அல்லல் உழப்பாரும் நாம்தாம். — க. சந்திரசேகரன், தஞ்சை–2.

0: 358: ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்களையும், அக் கூட்டத்தினரின் குள்ள நரிக் குணங்களையும் படித்ததும் என்னுள்ளம் துடித்தது. மற்றும், நமக்குவந்த மடலில் (346) ஓர் அன்பர் குறிப்பிட்டது போல் நடிகர் இராமச்சந்திரன் தாம் நடிக்கும் படங்களில் பாவேந்தா பாடல்களைப் புகுத்துகின்றூர் என்னும் கூற்று நூற்றுக்கு நூறு முழுப்பொய். படங்களில் பாவேந்தர் பாடல்களை இடம்பெறச் செய்பவர் படத்தயாரிப்பாளர் திரு. வேலுமணி அவர்களே யாவர். அந்த நடிகரின் நல்ல எண்ணத்தினுல்தான் பாவேந்தர் பாடல்கள் படத்தில் இடம் பெறுவது உண்மையாக இருந்தால் எத்தனைப் படங்களில் புகுத்தியுள்ளார் என்பதைக் கூற முடியுமா? அஃதாவது திரு. வேலுமணி அவர்களின் படங்களைத் தவிர்த்து. அடுத்து, இராசாசியின் கனவுகளை நனவாக்கு வோம்' என்று மேடைதோறும் முழங்கிக் கொண்டிருக்கும் புரட்(டு)சி நடிகர் எப்படித் தமிழ்நாட்டுக்காகத் தொண்டு செய்வார் என்று நம்பி ஏற்றுக்கொள்ள முடியும்? — சி. பூ. மணி, வெங்காலூர்.-21.